*10. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தொடர்பான செய்திகளையும், தகவல்களையும் அளிக்கும் வழிகாட்டி மையங்களாக வேலைவாய்ப்பு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. 37 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில், மாவட்ட அளவிலான தனியார் வேலைவாய்ப்பு உதவி மையங்கள் உருவாக்கப்பட்டு, அவை வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துவதுடன், நேர்காணல்களுக்கான உதவிகளையும் அளித்து வருகின்றன. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள தரவு தகவல்களை* (Database) *தனியார் நிறுவனங்கள் பயன்படுத்தி அவர்களுக்குத் தேவையான நபர்களைத் தேர்வு செய்து, பணிகளில் அமர்த்திக் கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

*முற்பகல் 11-20*

**திட்டம் மற்றும் வளர்ச்சி**

*11. 21-2-2014 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணத்தின் இரண்டாவது பகுதியை வெளியிட்டார்கள். துறைவாரியான அணுகுமுறைகளையும், ஆறு முக்கியத் துறைகளில் மேற்கொள்ளப்பட உள்ள 217 கட்டமைப்புத் திட்டங்களைப் பற்றிய குறிப்புகளையும் இந்த ஆவணம் எடுத்துரைத்துள்ளது. இவற்றில் 88 திட்டங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன என்பதையும், 16 திட்டங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட உள்ளன என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மேலும், 24 திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகள் மற்றும் விரிவான சாத்தியக்கூறு ஆய்வறிக்கைகள் தயார் செய்யப்பட்டு துவங்கும் நிலையில் உள்ளன. மீதமுள்ள திட்டங்கள் பல்வேறு தயாரிப்பு நிலைகளில் உள்ளன.*

12. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகவும், முக்கியக் கட்டமைப்புத் திட்டங்களுக்கு, குறிப்பாக, அரசு-தனியார் கூட்டு முயற்சிகள் மூலமாகச் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்துவதற்காகவும், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தமிழ்நாடு தொழில் கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தை (TNIDB) 2012 ஆம் ஆண்டில் அமைத்துள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,000 கோடி ரூபாய் 'தமிழ்நாடு தொழில் கட்டமைப்பு நிதியத்திற்கும்', (மேசையைத் தட்டும் ஒலி) 100 கோடி ரூபாய் 'திட்ட தயாரிப்பு நிதியத்திற்கும்' ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13. ஒரு சிறப்பு முயற்சியாக, தமிழ்நாடு தொழில் கட்டமைப்பு நிதிய மேலாண்மைக் கழகத்தின் (Tamil Nadu Infrastructure Fund Management Corporation) மூலமாக, நமது நாட்டிலேயே முதன்முறையாக, தமிழ்நாடு கட்டமைப்பு நிதியத்தை முதல்தர மாற்று முதலீட்டு நிதியமாக (Alternative Investment Fund Category I) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு உருவாக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தால் (Securities and Exchange Board of India) இந்த நிதியம் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டு, முதல் கட்டமாக 3,000 கோடி ரூபாய் நிதியைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டில், மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் புதிய கட்டமைப்புத் திட்டங்களுக்காக இந்நிதி ஆதாரங்கள் பயன்படுத்தப்படும்.

14. உலக அளவிலும், உள்நாட்டிலும் நிலவி வரும் உறுதியற்ற பொருளாதார சூழ்நிலைகளுக்கு இடையில், மாநிலப் பொருளாதாரத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் மாபெரும் பொறுப்பை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொண்டுள்ளது. மாநிலப் பொருளாதாரத்தை இரட்டை இலக்க வளர்ச்சியை நோக்கி இட்டுச் செல்வதற்கு முக்கியமாகக் கருதப்படும் உற்பத்தித் துறையில் உள்ள சவால் கடுமையாக உள்ளது. இத்தகைய சூழ்நிலைகளிலும், 2011-2012 ஆம் ஆண்டின் நிலையான விலைகளின்படி, 2015-2016 ஆம் ஆண்டிற்கான தேசிய அளவிலான பொருளாதார வளர்ச்சி விகிதம், 7.57 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ள போதிலும், தமிழ்நாட்டின் பொருளாதார

வளர்ச்சி விகிதம் 8.79 சதவீதமாகக் கணிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) பொருளாதார வளர்ச்சி குறித்த திருத்த மதிப்பீடுகள் வெளிவரும் போது, இந்த வளர்ச்சி விகிதம் மேலும் உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டிற்கான மாநிலத் திட்டச் செலவுகளுக்கான இலக்கு 60,610 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டிற்கான மாநிலப் பொருளாதார வளர்ச்சி விகிதமும் மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

15. பொருளாதார வளர்ச்சியில் அனைத்துத் தரப்பு மக்களும் சீராகப் பயன் பெறுவதை உறுதிசெய்து, ஏழை எளிய மக்களின் நிலையை உயர்த்த, பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் தனித்தனி மனிதவள மேம்பாட்டு அறிக்கைகளை உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள், பல்வேறு நலத் திட்டங்களை உகந்த முறையில் வடிவமைக்கத் தேவையான விவரங்களை அளிக்க உதவும். வறுமை, சுகாதாரம், கல்வி, பாலின ஏற்றத்தாழ்வு போன்ற குறியீடுகளில் பின்தங்கியுள்ள 105 வட்டாரங்களில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும் திட்டமான, 'மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியம்' (State Balanced Growth Fund) தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இந்த நிதியத்திற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசால் கைவிடப்பட்டுள்ள 'மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்' மற்றும் 'மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்' ஆகியவற்றிற்கு மாற்றாக, மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரங்களின் மூலமாக தொடங்கப்பட்ட 'சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்' (Special Area Development Programme), 2016-2017 ஆம் ஆண்டிலும் 75 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-25

16. நிருவாகத்தில் புது முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் உருவாக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வரும் 'தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டம்' (Tamil Nadu Innovation Initiatives) தொடர்ந்து

செயல்படுத்தப்படும். இத்தகைய புதுமையான முயற்சிகளை மேற்கொள்ள, 250.49 கோடி ரூபாய் செலவில் 115 திட்டங்கள் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்கு 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**தமிழ்மொழி வளர்ச்சி**

17. தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக செயல்படும் அனைத்து அமைப்புகளுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பான உதவிகளை அளித்து வருகிறார்கள். புகழ்பெற்ற பெண் எழுத்தாளர்களுக்கான ‘அம்மா இலக்கிய விருது’, (மேசையைத் தட்டும் ஒலி) உலகளவில் சிறந்த தமிழறிஞர்களுக்கான ‘உலகத் தமிழ்ச் சங்க விருது’, (மேசையைத் தட்டும் ஒலி) சிறந்த மொழிபெயர்ப்பாளர்களுக்கான ‘சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது’ ஆகிய விருதுகள் ஏற்கெனவே அறிவித்தபடி இந்த ஆண்டு முதல் வழங்கப்படும். 2016-2017 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தமிழ் வளர்ச்சித் துறைக்கு 32.94 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**சாலைப் பாதுகாப்பு**

18. சாலை விபத்து மேலாண்மை அமைப்பின் தகவல்களைப் பயன்படுத்தியும், சாலைகளில் காவல் துறையின் ரோந்துப் பணிகளை செம்மைப்படுத்தியும், விபத்துகளைக் குறைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள், தொழில்நுட்பச் சீரமைப்பு முயற்சிகள் போன்ற சாலைப் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேலும் தீவிரப்படுத்தும். 2016-2017 ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சாலைப் பாதுகாப்பு நிதிக்காக, மொத்தம் 165 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அதிக அளவில் விபத்துகள் நிகழக்கூடிய இடங்களில், சாலைக் குறைபாடுகளைச் சரி செய்ய, ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், சாலைப் பாதுகாப்பிற்கென தனியாக 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**சட்டம் ஒழுங்கு**

*19. 'அமைதி, வளம், வளர்ச்சி' என்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் மும்முனைக் கொள்கையில், தமிழகத்தில் அமைதிச் சூழல் நிலவச் செய்வதுதான் முதன்மைக் கொள்கையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) தீர்க்கமான மன உறுதி கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உரிய நேரத்தில் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து, மத நல்லிணக்கத்தையும், சட்டம் ஒழுங்கு நிலையையும் பாதுகாப்பதில் பெரும் கவனம் செலுத்தி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சாதி, மதம் தொடர்பான பிரச்சினைகளையும், பூசல்களையும், காவல் துறையினர், தேவையான அளவு மட்டும் வலிமையைப்* (Force) *பயன்படுத்தி, திறமையாகக் கையாண்டு வருகின்றனர். காவல் துறையினரின் தேடுதல் வேட்டைகள், சிறப்பான நுண்ணறிவுத் தகவல் அமைப்பு மற்றும் 10 எல்லையோர மாவட்டங்களில் நக்சலைட் பிரிவினரைத் தடுக்க சிறப்புப் பணிப் பிரிவு அமைத்தல் போன்ற நடவடிக்கைகளினால், இடதுசாரி தீவிரவாத சக்திகள் ஒடுக்கப்பட்டுள்ளன. நாட்டிலேயே முதன்முறையாக, தமிழ்நாட்டில் தான் 13 கடலோர மாவட்டங்களில், (மேசையைத் தட்டும் ஒலி) 500 மீனவ இளைஞர்கள் கடற்கரை ஊர்க்காவல் படைக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி)*

*20. இந்த ஆண்டு, பிப்ரவரி மாதம் 13 முதல் 22 ஆம் நாள் வரை, கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகத் திருவிழாவின்போது, 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) முறையாகச் சென்று தடங்கலின்றி புனித நீராடுவதற்காக, காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பான பாதுகாப்பு நடவடிக்கைகள், இத்துறையின் திறமையான செயல்பாட்டுக்கு உதாரணமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*21. அனைத்துக் காவல் நிலையங்களும் அரசுக் கட்டடத்தில் இயங்குவதை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உறுதி செய்யும் நோக்குடன், தனியார் கட்டடங்களில் செயல்பட்டு வரும் 64 காவல் நிலையங்களுக்கும் புதிதாக சொந்தக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பாதுகாப்பு, தகவல் தொடர்பு மற்றும் கண்காணிப்பிற்கான உபகரணங்கள், வாகனங்கள் போன்றவற்றை வழங்குவதற்கு, 'காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்' கீழ், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஏற்கெனவே*

50.10 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்துள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்திற்காக 68.62 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

22. 'குற்றங்களையும் குற்றவாளிகளையும் கண்காணிக்கும் கணினி இணைப்புத் திட்டத்தின்' (Crime and Criminal Tracking Network System) கீழ், மாநிலம் முழுவதும் உள்ள 1,482 காவல் நிலையங்களும், 479 காவல் துறை உயர் அலுவலகங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர, மாநில நிதியில் 938 சிறப்பு அலகுகளையும் இந்தத் திட்டத்தில் சேர்ப்பது உள்ளிட்ட பணிகளுக்கு, 22.14 கோடி ரூபாய்க்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

23. காவல் துறையினரின் வீட்டுவசதித் தேவைகளை நிறைவு செய்வதற்காக, 422 கோடி ரூபாய் செலவில் 2,673 வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் 2016-2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், காவல் துறைக்கு மொத்தமாக 6,102.95 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**

24. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திறன்மிகு தலைமையின் கீழ், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு வான்தூக்கிகள், விரைவு ஊர்திகள் போன்ற நவீன கருவிகள் வழங்கப்பட்டு, தொடர்ந்து நவீனமயமாக்கப்பட்டு வருகின்றது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அமைப்பின் தொழில்நுட்பத் திறனை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மேம்படுத்தி அதன் செயல்திறனை வலுப்படுத்தும். இத்துறைக்கென, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 230.07 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**சிறைச்சாலைகள்**

25. குற்றவாளிகளை சீர்திருத்தும் அமைப்புகளாக சிறைச்சாலைகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கருதுகிறது. எனவே, வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய தொழிற்கல்விப் பயிற்சிகளை

அளித்து, சிறைச்சாலை வளாகங்களில் உற்பத்தி நிலையங்களை உருவாக்கும் பல புதுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறைச்சாலைகள் துறைக்கு, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 282.92 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**நீதி நிருவாகம்**

26. நீதிமன்றங்கள் சீராகவும் செம்மையாகவும் செயல்பட, நீதிமன்றக் கட்டமைப்பு வசதிகள் பெருமளவு மேம்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில், 223 புதிய நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு, 486.26 கோடி ரூபாய் செலவில் புதிய நீதிமன்றக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், கூடுதல் நீதிபதிகளுக்கும், தேவையான ஊழியர்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. சென்னையில் மாநில நீதித்துறை பயிற்சிக் கழகத்தை அமைத்துள்ளதுடன், கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் அதன் மண்டல மையங்கள், 28.10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு சிறப்பு முயற்சியாக நீதிமன்றப் பதிவுருக்களை கணினிமயமாக்குவதற்கு 9.43 கோடி ரூபாய்க்கு ஒப்பளிக்கப்பட்டு அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நீதி நிர்வாகத்திற்கு 993.24 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**நிருவாக ஆளுமை**

27. நிருவாகத்தின் வெளிப்படைத் தன்மையையும் பொறுப்புடைமையையும் அதிகரிக்க மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுத்து வரும் பல்வேறு முயற்சிகளில், பொதுச் சேவைகளை மக்களின் இல்லங்களுக்கே கொண்டு சேர்க்கும் 'அம்மா திட்டமும்', (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் குறைகளை 24 மணி நேரமும் தீர்க்கவல்ல அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ள 'அம்மா அழைப்பு மையமும்', (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 10,532 இ-சேவை மையங்களும் குறிப்பிடத்தக்கவை ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இ-சேவை மையங்களின் மூலம், தற்போது அளிக்கப்பட்டு வரும் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுச் சேவைகளின் எண்ணிக்கை, நடப்பு ஆண்டில் 300 வரை உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது அமைக்க திட்டமிடப்பட்டுள்ள லோக் ஆயுக்தா அமைப்பு, தூய

நிருவாகத்தையும், பொறுப்புடைமையையும் உறுதி செய்து, நிருவாகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-35*

28. 'மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம்' (State Resident Data Hub) அமைக்கும் நடவடிக்கைகள் முடியும் தருவாயில் உள்ளன. தேசிய மக்கள்தொகைப் பதிவுகளை (National Population Registry) அடிப்படையாகக் கொண்டு குடியிருப்பவர்களின் தரவுகளுடன் கூடிய உயிரிஅளவுகள் (Biometric) ஒருங்கிணைக்கப்பட்ட தகவல் தொகுப்பாக இந்த மையம் விளங்கும். மக்களுக்குத் தேவையான பொதுச் சேவைகளை அளிப்பதற்கு பல்வேறு துறைகளின் தேவைகளை இத்தொகுப்பு மையம் பூர்த்தி செய்யும். அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை சிறப்பாகக் கண்காணிக்கவும், அத்திட்டங்களை உரிய மக்களுக்குச் சென்றடையச் செய்யவும் இந்த மையம் உதவும். மேலும், எதிர்காலத்தில் ஆதார் எண்ணை அடிப்படையாகக் கொண்டு நலத் திட்டப் பயன்கள் மக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்யவும் இந்தத் தகவல் தொகுப்பு மையம் பேருதவியாக அமையும்.

**வருவாய் நிருவாகம்**

29. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையின்கீழ் இயங்கும் இந்த அரசு, கடந்த ஐந்து ஆண்டுகளில் 65 புதிய வட்டங்களையும், *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒன்பது புதிய வருவாய்க் கோட்டங்களையும் உருவாக்கியுள்ளது. வருவாய்த் துறையை மக்கள் எளிதாக அணுகி பொதுச் சேவைகளை விரைவாகப் பெறுவதற்கு இது வழிவகுத்துள்ளது. மேலும், வருவாய்த் துறையின் நிருவாகத்தை மேம்படுத்த, தேவைக்கேற்ப புதிய வட்டங்களையும், வருவாய்க் கோட்டங்களையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உருவாக்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)* வருவாய்த் துறையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, 15 வட்டாட்சியர் அலுவலகங்கள், 5 கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் காஞ்சிபுரத்தில் நில அளவைத் துறை உதவி இயக்குநர் அலுவலகம் ஆகிய அலுவலகங்களுக்கான புதிய கட்டடங்கள் 51.57 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

2016 ஜூலை 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

30. நிலப் பதிவுகள் நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலமாக, நில வரைபடங்கள் கணினிமயமாக்கப்படுவதுடன், பத்திரப் பதிவு மற்றும் நில அளவைத் துறைகள் ஒருங்கிணைக்கப்பட்டு, பட்டா மாற்றங்கள், நிலப் பதிவுகளைப் புதுப்பித்தல் ஆகியவற்றை கணினி மூலமாக மேற்கொள்ளவும், புதுப்பிக்கப்பட்ட பதிவுகளை இணையதளம் மூலம் பெற்று மக்கள் பயன்பெறவும் வழிவகை செய்யப்படும். குறிப்பிட்ட வட்டங்களில் சோதனை முறையில் செயல்படுத்தப்பட்ட நவீன கணினி பட்டா மாற்ற முறை (Online Patta Transfer), மாநிலம் முழுவதுமாக விரைவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) முன்னோடித் திட்டமான 'விரைவு பட்டா மாற்றத் திட்டம்' (Fast Track Patta Transfer Scheme) மேலும் சீரமைக்கப்பட்டு, மக்களுக்குச் சேவைகள் சிறப்பாகச் சென்றடைவது உறுதி செய்யப்படும்.

31. 2016-2017 ஆம் ஆண்டில் 3.50 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) நிலம் குறைவாகவும், நிலமதிப்பு அதிகமாகவும் உள்ள இடங்களில், வீடில்லா குடும்பங்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டித் தருவதற்காக, (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுப் பட்டா வழங்கும் ஒரு புதிய அணுகுமுறையை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொள்ளும். வீட்டின் கட்டட வடிவமைப்பில் ஒரு நெகிழ்வுத் தன்மையைப் பின்பற்றி, ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் இத்தகைய கூட்டுப்பட்டா நிலங்களில் அடுக்குமாடி வீடுகள் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

32. உயர்த்தப்பட்ட நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் 'முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்', விவசாயிகளுக்குப் பாதுகாப்பையும் பேராதரவையும் அளித்து வருகிறது. 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து 2015-2016 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், 3,039 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) 37.67 இலட்சம் பயனாளிகளுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நிதியுதவியாக இத்திட்டத்தில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அளித்துள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்காக 206 கோடி ரூபாயும், (மேசையைத் தட்டும் ஒலி) வருவாய்த் துறைக்காக மொத்தம் 5,686 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**வேளாண்மை மற்றும் கூட்டுறவு**

*33. முதன்மைத் துறையின் தூணாக விளங்கும் வேளாண் துறையின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த துறைகளின் மேம்பாட்டை, மாநிலத்தின் வளர்ச்சிக்கான சிறப்புநோக்கு பெரும் திட்டங்களுள் ஒன்றாக செயல்படுத்த முடிவு செய்துள்ளது. உற்பத்தியைப் பெருக்கி பண்ணை அளவிலான உற்பத்தித் திறனை அதிகரித்து, விவசாயிகளின் வருவாயினை உயர்த்தி, நீடித்த, நிலையான வேளாண் வளர்ச்சியை ஏற்படுத்துவதே இந்த சிறப்புநோக்கு பெரும் திட்டத்தின் நோக்கமாகும். 2016-2017 ஆம் ஆண்டிற்கான உணவு தானிய உற்பத்தி இலக்கை 147 இலட்சம் மெட்ரிக் டன்னாக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கை அடைவதற்காக, 'தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்'* (National Agriculture Development Programme), *'நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்'* (National Mission for Sustainable Agriculture) *மற்றும் 'தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம்'* (National Food Security Mission) *போன்ற முக்கியத் திட்டங்கள் முனைப்போடு செயல்படுத்தப்படும்.*

*முற்பகல் 11-40*

*34. பல்வேறு திட்டங்களின்கீழ் கிடைக்கப்பெறும் நிதி ஆதாரங்களை ஒருங்கிணைத்து நிலையான வேளாண் வளர்ச்சிக்கு கீழ்க்காணும் உத்திகளைப் பயன்படுத்தி ஒரு விரிவான அணுகுமுறை கடைபிடிக்கப்படும்.*

- *நவீன தொழில்நுட்பங்கள் கூடுதல் முனைப்புடன் விவசாயிகளிடையே கொண்டு செல்லப்படும். 2016—2017 ஆம் ஆண்டில், 27.50 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் திருந்திய நெல் சாகுபடி முறையும்* (System of Rice Intensification), *43,688 ஏக்கர் நிலப்பரப்பில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறையும்* (Sustainable Sugarcane Initiative) *விரிவாக்கம் செய்யப்படும். பருத்தி மற்றும் காய்கறி சாகுபடியில் துல்லியப் பண்ணைய முறை ஊக்குவிக்கப்படும்.*

- *தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை நிறைவு செய்யும் வகையில், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்*

வித்துகள் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க, சிறப்புக் கவனம் செலுத்தும் வகையில், மானாவாரி நில விவசாயத்திற்கு ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படும். நீர் ஆதாரங்களை மேம்படுத்தி, மழைநீரைச் சேமித்து, விரயமின்றி பயன்படுத்தும் வழிமுறைகள் இத்திட்டத்தின் முக்கியக் கூறாக விளங்கும். பண்ணை அளவிலான வருவாயைப் பெருக்க, கறவை மாடுகள் மற்றும் கோழிகள் வளர்ப்பை உள்ளடக்கிய கலப்புப் பண்ணைய முறை மானாவாரிப் பகுதிகளில் ஊக்குவிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

- பாசன வசதிகளைக் கொண்ட நிலங்களில், பச்சைப் பயறு, உளுந்து, துவரை போன்ற பயறுவகை சாகுபடியினை ஊக்குவித்து, பயறு உற்பத்தியில் தன்னிறைவுக்கான ஒரு சிறப்புத் திட்டம் இந்த ஆண்டில் துவங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பயறு உற்பத்தியில் 9.80 இலட்சம் மெட்ரிக் டன் அளவை அடையும் நோக்கத்துடன், 27.50 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயறு சாகுபடி மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களது அரசு திட்டமிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய முயற்சிகளினால், நமது மாநிலம் பயறு உற்பத்தியில் தன்னிறைவு அடையும் என நான் நம்புகிறேன்.

- நுண்ணீர்ப் பாசனத்திற்கு மானியம் வழங்கும் கொள்கை தொடர்ந்து பின்பற்றப்படும். 2016-2017 ஆம் ஆண்டில், வேளாண் பயிர்கள் பயிரிடப்படவுள்ள 28,540 ஏக்கர் பரப்பிலும், தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடப்படவுள்ள 86,707 ஏக்கர் பரப்பிலும் நுண்ணீர்ப் பாசன முறை 319 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

- பண்ணை இயந்திரமயமாக்கல் திட்டத்தின்கீழ், பண்ணை இயந்திரங்கள் பயன்படுத்துவதை பல்வேறு நிலைகளில் ஊக்குவிக்கும் தற்போதைய முயற்சிகள் தொடரும். கனரக இயந்திரங்கள் வேளாண் பொறியியல் துறையின்மூலம் வாங்கப்பட்டு பயன்படுத்தப்படும். விவசாயிகளுக்கு அதிகபட்சமாக 50 சதவீத மானியத்தில் பண்ணை இயந்திரங்கள் வாங்கிட வழிவகை செய்யப்படும். (மேசையைத்

தட்டும் ஒலி) கிராமப்புற இளைஞர்களுக்கு 40 சதவீத மானியத்தில் வேளாண் இயந்திரங்களை வழங்கி, அவற்றை வாடகைக்கு வழங்கும் மையங்களை அமைக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை, 20.99 கோடி ரூபாய் செலவில் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் 212 மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2016-2017 ஆம் ஆண்டில், மேலும் 32.45 கோடி ரூபாய் செலவில் 324 மையங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டிற்கு, பண்ணை இயந்திரமயமாக்கல் திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

35. பசுமைக்குடில் சாகுபடி, நிழல்வலை சாகுபடி, அடர் நடவு முறை, துல்லியப் பண்ணைய முறை போன்ற நவீன தொழில்நுட்பங்கள் தோட்டக்கலைப் பயிர்களில் தொடர்ந்து ஊக்குவிக்கப்படும். அடுத்த ஐந்து ஆண்டுகளில், காய்கறிகள் மற்றும் பழங்களுக்கான சாகுபடிப் பரப்பு, தற்போதுள்ள 13.85 இலட்சம் ஏக்கரிலிருந்து, 16 இலட்சம் ஏக்கராக அதிகரிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) வணிகரீதியாக அதிக வருவாயை ஈட்டித் தரக்கூடிய பயிர்களில் ஒன்றான கொக்கோ பயிரை, அதற்கு உகந்த வேளாண் தட்பவெப்ப நிலை கொண்ட பகுதிகளிலும், தென்னந்தோப்புகளில் பல அடுக்கு ஊடுபயிராகவும் பயிரிட ஊக்குவிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) தோட்டக்கலைத் துறைக்கென, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 518.19 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

36. வேளாண் பயிர்களில் தரமான விதைகளை விநியோகம் செய்வதற்காக, தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமையை (TANSEDA) மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நிறுவியுள்ளது. தோட்டக்கலைப் பயிர்களுக்கான விதைகள் மற்றும் திரவ உரங்களை, தமிழ்நாடு தோட்டக்கலை மேம்பாட்டு முகமை (TANHODA) விநியோகம் செய்து வருகிறது. மேலும், விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் உரங்களை வழங்குவதற்காக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு (TANFED) சுழல் நிதியாக 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

*முற்பகல் 11-45*

*37.* பழங்கள், காய்கறிகள் போன்ற விரைவில் அழுகக்கூடிய விளைபொருட்களை, உற்பத்தி முதல் சந்தைப்படுத்துதல் வரையிலான விநியோகச் சங்கிலித் தொடர் மேலாண்மைக்காக ஒரு சிறப்புத் திட்டத்தை, 10 மாவட்டங்களில் 398.75 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளை அமைத்து, அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளை வெகுவாகக் குறைப்பதன்மூலம், வேளாண்மையில் ஒரு நிலைத்தன்மையைக் கொண்டு வந்து, பெரும் மாற்றத்தை இத்திட்டம் ஏற்படுத்தும். வருங்காலத்தில், மற்ற மாவட்டங்களிலும் தேவைக்கேற்ப இத்திட்ட அணுகுமுறை விரிவாக்கம் செய்யப்படும்.

*38.* வேளாண் சந்தைகளை மேம்படுத்தி, தேசிய அளவில் விளைபொருட்களுக்கான சந்தைகளுடன் ஒருங்கிணைக்கும் வகையில், போதுமான நிதியுதவியுடன் செயல்படுத்த, ஒரு திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வடிவமைத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது வேளாண்மைத் துறையில் ஒரு மாபெரும் முயற்சியாக அமையும். வேளாண் பொருட்களுக்கான சந்தைகளின் செயல்திறனை மேம்படுத்த, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் (Tamil Nadu Agricultural Produce Marketing (Regulation) Act) *1987*-ல் தேவையான திருத்தங்கள் கொண்டுவரப்படும்.

*39.* இயற்கைச் சீற்றங்களால் விவசாயத்தில் ஏற்படும் இழப்புகளிலிருந்தும், அதனால் ஏற்படும் நிச்சயமற்ற தன்மையிலிருந்தும் விவசாயிகளைப் பாதுகாக்க, 'பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம்' (Pradhan Mantri Fasal Bima Yojana) என்ற புதிய மேம்படுத்தப்பட்ட பயிர் காப்பீட்டுத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்கு 239.51 கோடி ரூபாய் மாநில அரசின் பங்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

*40.* கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (TNCSC) மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குக் கழகம் (TNWC) ஆகியவற்றின்கீழ் உள்ள கிடங்குகளின் கொள்ளளவுத் திறனை, கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த அரசு கணிசமாக

உயர்த்தியுள்ளதன் பலனாக, விளைபொருட்கள் அடமானக் கடனை (Produce Pledge Loan) விவசாயிகள் பெறுவது அதிகரித்துள்ளது. வரும் ஆண்டுகளிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்கு வசதிகளை வலுப்படுத்தவும், சைலோ கிடங்குகள் போன்ற உயர் தொழில்நுட்ப சேமிப்பு முறைகள்மூலம் உணவு தானியங்களின் சேமிப்பை அதிகரிக்கவும், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தனது முயற்சிகளைத் தொடர்ந்து எடுக்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*41.* தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்ற, ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு 31-3-2016 அன்று வரை செலுத்த வேண்டிய குறுகியகாலப் பயிர்க் கடன்கள், நடுத்தரகால மற்றும் நீண்டகால விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதன்படி தள்ளுபடி செய்ய வேண்டிய கடன் மற்றும் வட்டி உள்ளிட்ட மொத்தத் தொகை 5,780.92 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இத்தொகை திரும்பச் செலுத்தப்படும் வரையுள்ள வட்டியுடன் கூட்டுறவு வங்கிகளுக்கு ஐந்து ஆண்டுகளில் அரசால் திரும்பச் செலுத்தப்படும். இந்தத் தள்ளுபடியால் 8,35,360 குறு விவசாயிகள் மற்றும் 8,58,785 சிறு விவசாயிகள் பயன் பெறுவார்கள். இந்தக் கூட்டுறவுக் கடன் தள்ளுபடித் திட்டத்திற்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,680.73 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* மேலும், 2016-2017 ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகள்மூலம் 6,000 கோடி ரூபாய் புதிய பயிர்க்கடன்கள் வழங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**கால்நடை பராமரிப்பு**

*42.* மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் முன்னோடித் திட்டமான 'விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம்', *(மேசையைத் தட்டும் ஒலி)* கிராமப்புறப் பொருளாதாரத்தில், குறிப்பாக ஏழைகளின் வாழ்வாதாரத்தில், ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. கறவைப் பசுக்களுக்கான அலகுத் தொகை 30,000 ரூபாயிலிருந்து 35,000 ரூபாயாக உயர்த்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* இத்திட்டத்தைத்

தொடர்ந்து செயல்படுத்த, 2016-2017 ஆம் ஆண்டில் 12,000 ஏழைப் பெண்களுக்கு 12,000 கறவைப் பசுக்களும், ஒரு இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு நான்கு இலட்சம் வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகளும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 182.33 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தீவன உற்பத்தித் திட்டத்திற்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 11-50

43. 2016-2017 ஆம் ஆண்டில், 100 கால்நடை கிளை மையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு, அவற்றுக்குத் தேவையான கட்டட வசதிகளும் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) கால்நடை பராமரிப்புத் துறையின் கட்டமைப்பு வசதிகளை நபார்டு வங்கி நிதியுதவியுடன் வலுப்படுத்துவதற்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 90.27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கோழிப் பண்ணை வளர்ச்சித் திட்டத்தின்மூலம் பழங்குடியினர் வாழும் பகுதிகளிலும், வறட்சியான பகுதிகளிலும் கறிக்கோழிப் பண்ணைகளையும், நாட்டுக் கோழிப் பண்ணைகளையும் ஊக்குவிக்க, 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், கால்நடை பராமரிப்புத் துறைக்காக 1,188.97 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**பால்வளம்**

44. கடந்த ஐந்து ஆண்டுகளில், பல்வேறு திட்டங்களின்கீழ், 593.65 கோடி ரூபாய் செலவில் பால்வளத் துறைக்கான பல்வேறு கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. அதிகரித்து வரும் பால் கொள்முதலைச் சமாளிக்க, பெரம்பலூர் மற்றும் திருவண்ணாமலையில் புதிய பால் பண்ணைகளும், அம்பத்தூரில் பால் பொருட்கள் தயாரிக்கும் அலகும் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய முயற்சிகளால், ஆவின் நிறுவனம்

தனது பால் கொள்முதலை, நாளொன்றுக்கு 28.97 இலட்சம் லிட்டர் அளவிற்கு அதிகரித்து, 22.95 இலட்சம் நுகர்வோரின் தேவையை நிறைவு செய்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தென் மாவட்டங்களில், பால்வளத்தை ஊக்குவிக்க 45 கோடி ரூபாய் செலவில், புதிய பால் பொருட்களைத் தயாரிக்கும் அலகு ஒன்று மதுரையில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், ஐஸ்க்ரீம் உட்பட பல்வேறு பால் பொருட்கள் தயாரிக்கப்படும். 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பால்வளத் துறைக்கு 121.69 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மீனளம்**

45. தமிழக மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காகவும், மீனவ மக்களின் நலத்திற்காகவும், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பெரும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. மீன்பிடித் தடைக் காலத்தில் மீனவர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வரும், குடும்பத்திற்கு 4,000 ரூபாய் நிவாரண உதவியும், மீன்பிடி குறைவாக உள்ள காலத்தில் வழங்கப்பட்டு வரும், குடும்பத்திற்கு 2,000 ரூபாய் நிவாரண உதவியும் மீனவர்களின் இன்னல்களையும், துயர்களையும் கணிசமாகப் போக்கியுள்ளது. தேர்தல் அறிக்கையில் உறுதியளித்தபடி, இவ்விரு திட்டங்களிலும் வழங்கப்பட்டு வரும் நிவாரண உதவிகள், குடும்பம் ஒன்றிற்கு 5,000 ரூபாயாக இனி உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவைபோன்ற நிவாரண உதவித் திட்டங்களைச் செயல்படுத்த, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 223 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

46. ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கும் முன்னோடித் திட்டம் மூலமாக, சூரை மீன்பிடித் தூண்டில் படகுகளை 50 சதவீத மானியத்தில் 30 இலட்சம் ரூபாய்க்கு மானியம் மிகாமல், மீனவர்கள் வாங்கிப் பயன்பெற 51.30 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின் மூலமாக இதுவரை, 94 மீனவர்கள் பயன் பெற்றுள்ளனர். 2016-2017 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 14.32 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

47. ஆபத்தான கால கட்டங்களில் மீனவர்களை எச்சரிக்கை செய்வதற்காக, 48 கோடி ரூபாய் செலவில், 30,000 அவசரகாலத்

தகவல் அனுப்பும் கருவிகள் (Distress Alert Transmitters) மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. உலக வங்கி நிதியுதவியுடன், 62.14 கோடி ரூபாய் செலவில் தொலைத் தொடர்பு வசதிகளையும், உயர் அதிர்வெண் (VHF) தொடர்பு சாதனங்களையும், அனைத்து மீன்பிடிப் படகுகளுக்கும் வழங்க உரிய நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

48. மீன்குஞ்சு உற்பத்திக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுத்த அயராத முயற்சிகளால், மீன்குஞ்சுகளின் தேவைக்கும், உற்பத்திக்கும் இடையே இருந்த இடைவெளி 25 கோடியிலிருந்து 8.73 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) திருவள்ளூர், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், நான்கு மீன் பதப்படுத்தும் பூங்காக்கள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இது தவிர, மீன் இறங்கு தளங்களை மேம்படுத்தும் பணிகளுக்காக, 209.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மீனளத் துறைக்கு மொத்தமாக 743.79 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-55

**சுற்றுச்சூழல் மற்றும் வனம்**

49. மத்திய அரசின் 2015 ஆம் ஆண்டிற்கான இந்தியக் காடுகள் நில அளவைக் கணக்கெடுப்பு அறிக்கையில், தற்போதைய மதிப்பீட்டின்படி, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களையும் விட காடுகளின் பரப்பளவு நமது மாநிலத்தில்தான் அதிகளவில் (மேசையைத் தட்டும் ஒலி)அதிகரித்துள்ளது என்பதை இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். கால்வாய் கரையோரங்களிலும், படுகை நிலப் பகுதிகளிலும், வனப்பகுதிக்கு வெளியில் உள்ள பகுதிகளிலும் தேக்கு மரங்கள் மற்றும் இதர மரங்கள் வளர்ப்பின் மூலம், மாநிலத்தின் பசுமைப் பரப்பளவு மேம்படுத்தப்பட்டு வருகிறது. 2016-2017 ஆம் ஆண்டு தொடங்கி அடுத்த ஐந்தாண்டுகளில், தஞ்சாவூர், திருவாரூர், திருச்சி, மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 52.64 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

*50.* ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை (JICA) உதவியுடன் செயல்படுத்தப்படும் 'தமிழ்நாடு பல்லுயிரினப் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டத்திற்கு' 2011-2012 முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் 339.18 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இந்த திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக 109.51 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*51.* பள்ளிக்கரணை சதுப்பு நில சுற்றுச்சூழல் மீட்டெடுப்புப் பணிகளும், மாதவரம், அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகளைச் சீரமைப்பது போன்ற சுற்றுச்சூழலை மீட்டெடுக்கும் பணிகளும் மொத்தம் 74.93 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சேத்துப்பட்டு ஏரி வெற்றிகரமாக சீரமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள அனைத்து நீர்நிலைகளிலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நிதியைப் பயன்படுத்தி, இது போன்ற சீரமைப்புப் பணிகளை படிப்படியாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொள்ளும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*52.* வைகை மற்றும் நொய்யல் ஆறுகளின் நீர்வரத்தினை நிலைப்படுத்தவும், வனப்பகுதிகளில் நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்காகவும், அந்த ஆறுகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் அமைந்துள்ள காடுகளின் வளத்தைப் பெருக்கி பல்லுயிரினப் பாதுகாப்பை மேம்படுத்த, 24.58 கோடி ரூபாய் செலவில் 'வைகை மற்றும் நொய்யல் ஆறுகளுக்குப் புத்துயிரளித்தல்' என்ற புதிய திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுத்தும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*53.* வன விலங்குகளால் மனிதர்களுக்கு ஏற்படும் ஆபத்தைத் தவிர்த்து, மக்களுக்குப் பாதுகாப்பான உணர்வை ஏற்படுத்துவதற்காக, எளிதில் அத்தகைய பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய பகுதிகளில், வேலிகளை அமைத்தல், காடுகளில் தீவன ஆதாரங்களை அதிகரித்தல் மற்றும் விலங்குகளுக்குத் தேவையான நீர்க் குட்டைகளை அமைத்தல் போன்ற பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொண்டுள்ளது. வன விலங்குகளின் தாக்குதலால் ஏற்படும் உயிரிழப்பு, பயிர்ச் சேதம், உடைமைகளுக்கு ஏற்படும் சேதம் போன்றவற்றிற்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை, மாநிலப் பேரிடர் நிவாரண நிதி (SDRF) விதிமுறைகளுக்கு இணையாக

உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறைக்கு 652.78 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**நீர்வள ஆதாரங்கள் மற்றும் பாசனம்**

54. 'நீரின்றி அமையாது உலகு' என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு. நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து இருந்து வருகிறது. எனவே, நீர் ஆதாரங்களைப் பாதுகாத்து, உகந்த அளவில் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் தேவைப்படுகின்றன. நீர் ஆதாரங்களைப் பயன்படுத்துவோரின் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும் குடிமராமத்து முறைக்கு புத்துயிரூட்டுவதற்காகவும், நீர்நிலைகளை மீட்டெடுப்பதற்காகவும், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நீர் ஆதார மேலாண்மைக்கு ஒரு மாநிலம் தழுவிய இயக்கத்தை மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி) வெளிநாட்டு நிதி உதவி பெறும் பல்வேறு திட்டங்களின்கீழ், அணைகள் மற்றும் நீர் நிலைகளின் கொள்ளளவை தொடர்ந்து அதிகரிப்பதுடன், பொதுப் பணித் துறையின்மூலம் பாசனத்திற்கான நீர் ஆதாரங்களைப் புனரமைப்பதற்கான ஒரு மாபெரும் முயற்சி மேற்கொள்ளப்படும். அதேபோல், மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் பெறப்படும் நிதியை ஒருங்கிணைத்து, குளங்கள், ஊரணிகள் மற்றும் கோயில் குளங்களை சுத்தம் செய்து மேம்படுத்துவதுடன், ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டிலுள்ள சிறு பாசன ஏரிகள் மற்றும் பாசன அமைப்புகளையும் மேம்படுத்துவதற்கான ஒரு மாபெரும் திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி) குடிமராமத்து முறைக்கு புத்துயிரூட்டுவதற்காக, முதல் கட்டமாக 100 கோடி ரூபாய் ஊக்க நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வருங்காலத்தில் நபார்டு வங்கி உதவியுடன் இந்த நிதி கணிசமான அளவிற்கு உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12-00

55. அண்மையில் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு, நிரந்தர வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை கடலூர் மாவட்டத்தில் மேற்கொள்ள, வடிகால்களை

அகலப்படுத்துதல், வாய்க்கால்களின் வரப்புகளையும், நதிக் கரைகளையும் பலப்படுத்துதல் போன்ற வெள்ளத் தடுப்புப் பணிகளை 140 கோடி ரூபாய் செலவில் நபார்டு வங்கி நிதியுதவியுடன், 2016-2017 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி) எளிதாக பாதிப்புக்குள்ளாகக்கூடிய சென்னை போன்ற கடலோர மாவட்டங்களுக்காக, விரிவான வெள்ளப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தயாரித்து வருகிறது. இத்திட்டங்கள் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். இந்த நிதியாண்டில் நபார்டு வங்கி உதவியுடன் வெள்ளத் தடுப்பு மற்றும் நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, 445.19 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

56. உலக வங்கி உதவியுடன் 'அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தை' (DRIP), 745.49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுத்தி வருகிறது. புனரமைக்கப்பட வேண்டிய 105 அணைகளுள், 66 அணைகளில், பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்காக 258.46 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

57. ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் 'பருவநிலை மாற்றத் தழுவல் திட்டத்தின்' முதற்கட்டமாக, வெண்ணாறு உப வடிநிலப் பகுதியில் 279 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் எஞ்சியுள்ள பணிகள், 2016-2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். உலக வங்கியின் உதவியுடன், 61 உப வடிநிலப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட 'நீர்வள நிலவளத் திட்டத்தின்' முதல் கட்டப் பணிகள் (Irrigated Agriculture Modernisation and Water Bodies Restoration and Management Project - Phase-I) வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதை அடுத்து, இத்தகைய பணிகள் மேற்கொள்ளப்படாத உப வடிநிலப் பகுதிகளில், 2,950 கோடி ரூபாய் செலவில் இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான (Phase-II) பணிகள் உலக வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்பட உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

58. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அயராது மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக,

மாநிலங்களுக்கிடையிலான நதிநீர்ப் பிரச்சினைகளில் வியக்கத்தக்க பல வெற்றிகளை தமிழ்நாடு பெற்றுள்ளது. முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) முதல் கட்டமாக 142 அடியாக உயர்த்துவதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினைப் பெற்றதும், (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி நடுவர் மன்றம் வழங்கிய இறுதித் தீர்ப்பு அரசிதழில் மத்திய அரசால் வெளியிடப்பட்டதும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெரும் வெற்றிகளாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

59. தேசிய நதிகளை இணைக்கும் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலமாக மட்டுமே, மாநிலத்தின் நீர்ப் பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வு காண முடியும் என்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் உறுதியான கருத்தாகும். இந்நிலையில், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி, கருமேனியாறு மற்றும் நம்பியாறு நதிகளை இணைக்கும் பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களது தலைமையிலான அரசு ஏற்கெனவே செயல்படுத்தி வருகிறது. இத்தருணத்தில், தேசிய நதிகள் இணைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ளும்படி மத்திய அரசை கேட்டுக் கொள்கிறேன். 2016 2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நீர்வள ஆதாரங்கள் துறைக்கு 3,406.69 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## நெடுஞ்சாலைத் துறை

60. 2016-2017 ஆம் ஆண்டில் 'ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்' (CRIDP) கீழ் 1,000 கிலோமீட்டர் சாலைகளை அகலப்படுத்தும் பணிகளும், 3,000 கிலோமீட்டர் சாலைகளை மேம்படுத்துவதற்கான பணிகளும் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 'செயல்பாடு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்த முறையின்' (Performance Based Maintenance Contract) கீழ் பொள்ளாச்சி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் திருவள்ளூர் கோட்டங்களில் மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கிய மாவட்டச் சாலைகளை வலுப்படுத்தவும், பராமரிக்கவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு

வருகின்றன. நடப்பு நிதியாண்டிலும் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்காக, ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 437 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2016-2017 ஆம் ஆண்டில் சாலைகள் மற்றும் பாலங்களை மேம்படுத்தும் பணிகளை, 300 கோடி ரூபாய் செலவில் நபார்டு வங்கியின் கடனுதவியுடன் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

61. போக்குவரத்து அளவு, தொழில் பகுதிகளுக்கான இணைப்பு மற்றும் சமூகப் பொருளாதார முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, 222 கிலோ மீட்டர் நீளமுள்ள முக்கிய மாவட்டச் சாலைகளும் 9 கிலோ மீட்டர் நீளமுள்ள இதர மாவட்டச் சாலைகளும் மாநில நெடுஞ்சாலைகளாகவும், 530 கிலோ மீட்டர் நீளமுள்ள இதர மாவட்டச் சாலைகளும் 12 கிலோ மீட்டர் நீளமுள்ள சர்க்கரை ஆலைச் சாலைகளும் முக்கிய மாவட்டச் சாலைகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில், 12 சாலை மேம்பாலங்கள் மற்றும் சாலை சுரங்கப் பாலங்கள் 375.17 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-05

62. போக்குவரத்து நெருக்கடி மிகுந்த முக்கியமான இடங்களில் நெரிசலைக் குறைப்பதற்காக, 320 கோடி ரூபாய் செலவில் சேலம் மாநகரில் உள்ள ஐந்து சாலைகள் சந்திப்பு, (மேசையைத் தட்டும் ஒலி) 111.40 கோடி ரூபாய் செலவில் ஏ.வி.ஆர்.ரவுண்டானா மற்றும் குரங்குச்சாவடி சந்திப்புகள், 26.77 கோடி ரூபாய் செலவில் திருவாகவுண்டனூர் சந்திப்பு மற்றும் 121.82 கோடி ரூபாய் செலவில் கோயம்புத்தூரில் உள்ள ஆத்துப்பாலம் மற்றும் உக்கடம் சந்திப்பு முதல் ஒப்பணக்காரத் தெரு வரை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மேம்பாலங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டப் பணிகள் மேலும் துரிதப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

63. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் 'தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்' (TNRSP) இரண்டாவது கட்டத்தின்கீழ், 427 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் கடின விளிம்புகளுடன் கூடிய அகலப்படுத்தப்பட்ட இருவழிச் சாலைகளாகவும், 146 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள்

நான்குவழிச் சாலைகளாகவும் தரம் உயர்த்தப்படுவதுடன், 597 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளைப் பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 'விளைவு மற்றும் செயல்திறன் அடிப்படையிலான சாலைப் பராமரிப்பு ஒப்பந்த முறையின்' கீழ் (Output and performance based Road Contract) இரண்டு பணிகளுக்கும், பொறியியல், கொள்முதல், கட்டுமான ஒப்பந்த முறையில் (Engineering, Procurement and Construction mode) 10 பணிகளுக்கும் ஒப்பந்தங்கள் ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ளன. அடுத்த கட்டமாக, 30 கிலோ மீட்டர் நீளமுள்ள மேட்டுப்பாளையம்-ஈரோடு நெடுஞ்சாலை, 70 கிலோ மீட்டர் நீளமுள்ள ஒட்டன்சத்திரம்-திருப்பூர் நெடுஞ்சாலை மற்றும் 46 கிலோ மீட்டர் நீளமுள்ள திருநெல்வேலி-கொல்லம் நெடுஞ்சாலை ஆகிய மாநில நெடுஞ்சாலைகள், அரசு தனியார் பங்களிப்பு முறையில் 1,541 கோடி ரூபாய் செலவில் நான்குவழிச் சாலைகளாகத் தரம் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டங்களுக்காக 1,220.28 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## பொது விநியோகத் திட்டம்

64. மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பொது விநியோகத் திட்டத்தில் 34,686 நியாயவிலைக் கடைகள்மூலம், 1.91 கோடி அரிசி அட்டைதாரர்களுக்கும் விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருவதால், (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கான உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இது தவிர, பல்வேறு அத்தியாவசியப் பொருட்களும் கணிசமான மானிய விலையில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகளை கணினிமயமாக்குவதற்காகவும், குடும்ப அட்டை தகவல் தொகுப்பினை ஆதார் எண்ணுடன் ஒருங்கிணைப்பதற்காகவும், 318.40 கோடி ரூபாய் செலவில் கணினிமயமாக்கும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் 2016 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஸ்மார்ட் அட்டைகள் வழங்குவதற்கு வகை செய்யப்படுவதுடன் இத்திட்டச் செயலாக்கத்தில் உள்ள குறைகளைச் சீர்செய்து செம்மைப்படுத்தவும் வழி ஏற்படும். மேலும், புதிய அட்டை வழங்குதல், இடம் பெயர்தல் போன்ற மாறுதல்களை இணையவழியாக மேற்கொள்வதுடன், மக்களுக்கு எளிதில் பயனளிக்கும் வகையில் செயல்பாடுகள் துரிதமாகவும் எளிதாகவும் இருக்க வழிவகை ஏற்படும்.

*65.* நுகர்வோரையும் விவசாயிகளையும் இணைக்கும் புதிய முயற்சியாக, பண்ணைப் பசுமை நுகர்வோர் மையங்கள் மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காய்கறிகளை இந்த மையங்களுக்குக் கொண்டு செல்ல, பண்ணைப் பசுமை நுகர்வோர் வாகனங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளன. சந்தை அளவில் விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட விலைக் கட்டுப்பாட்டு நிதியம் சிறப்பாகவும், செம்மையாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய சந்தை விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்விலிருந்து ஏழை எளிய மக்களையும், நடுத்தரக் குடும்பங்களையும் பாதுகாத்து வருகின்றன.

*பிற்பகல் 12-10*

**எரிசக்தி**

*66.* தடையற்ற, சீரான மின்சாரம் வழங்கும் நோக்குடன், மின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முக்கியத்துவம் வழங்கி வருகிறது. மாநில மற்றும் மத்திய அரசுகளின் மின்சார உற்பத்தி முகமைகளின் மூலமாகவும், நீண்டகால, குறுகியகால மின் கொள்முதல் ஒப்பந்தங்களின் மூலமாகவும், சூரிய ஒளி மின் கொள்முதல் மூலமாகவும், கடந்த ஐந்து ஆண்டுகளில், *8,432.50* மெகாவாட்(மேசையைத் தட்டும் ஒலி) கூடுதல் மின்சாரம் பெறப்பட்டுள்ளது. பல்வேறு அனல் மின் நிலையங்களின் உற்பத்திப் பணிகள் திட்டமிடப்பட்டபடி விரைவாக முடிக்கப்பட்டு உற்பத்தி துவங்கப்பட்டதால், மின்சாரத் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே உள்ள இடைவெளி சரி செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட மின் திட்டங்களும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதியின்படி, அடுத்த ஐந்து ஆண்டுகளில் *13,000* மெகாவாட் அனல் மின்சாரமும், (மேசையைத் தட்டும் ஒலி) *2,500* மெகாவாட் புனல் மின்சாரமும், *3,000* மெகாவாட் (மேசையைத் தட்டும் ஒலி) சூரிய மின்சக்தியும் மாநிலத்தின் தற்போதைய மின் உற்பத்தித் திறனுடன் கூடுதலாகச் சேர்க்கப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது திறமையான நடவடிக்கைகளாலும், (மேசையைத் தட்டும் ஒலி) ஒருங்கிணைந்த முயற்சிகளாலும்தான், இக்குறுகிய காலத்தில்

*மாநிலத்தின் எரிசக்தித் துறையில் இத்தகைய பெரும் மாற்றம் சாத்தியமானது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*67. பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெறும் திட்டங்களின் வாயிலாக, மாநிலத்திலுள்ள மின்கடவுப் பாதைகள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. ஜெர்மன் வங்கி உதவியுடன் பசுமை ஆற்றல் மின்தொடர் திட்டம் 1,593 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 5,014 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு மின்தொடரமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறப்பாக நடைபெற்று வரும் இத்திட்டங்களுக்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,738 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*68. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 191 இலட்சம் நுகர்வோர்கள் பயன்பெறும் வகையில், அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட்டுகள் வரை (மேசையைத் தட்டும் ஒலி) கட்டணமில்லா மின்சாரம் வழங்கி தமது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறிவிப்பின்மூலம், அரசுக்கு ஆண்டுதோறும் 1,607 கோடி ரூபாய் அளவிற்கு கூடுதல் நிதிச் சுமை ஏற்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்த வாக்குறுதியின்படி கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கட்டணமில்லா மின்சாரம், முறையே, 200 யூனிட்டுகள் மற்றும் 750 யூனிட்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மின்சாரத்திற்கான மானியத்திற்கு மட்டும் நடப்பு நிதியாண்டில் 9,007 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நிதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின்* (TANGEDCO) *கடனை அரசு ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, அதைத் திரும்பச் செலுத்துவதற்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எரிசக்தித் துறைக்கு 13,856 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

## போக்குவரத்து

*69.* தமிழகத்தில் பேருந்துப் போக்குவரத்து சேவைகள், 20,839 வழித்தடங்களில் செம்மையான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இச்சேவைகள் 22,948 பேருந்துகளின்மூலம் உரிய காலத்தில் போக்குவரத்து இணைப்பு வசதிகளை பொது மக்களுக்கு அளிப்பது மட்டுமல்லாமல், ஏழை, எளிய மக்களுக்கும் குறைந்த செலவில் போக்குவரத்து வசதிகளையும் வழங்கி வருகின்றன. பொதுமக்களுக்குப் பயனளிக்கும் வகையில், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் சிற்றுந்துகளையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை மாற்றும் பணி ஒரு தொடர் பணியாகும். 2016-2017 ஆம் ஆண்டில் பழைய பேருந்துகளை மாற்ற, 2,000 புதிய பேருந்துகளை வாங்குவதற்குப் (மேசையைத் தட்டும் ஒலி) பங்கு மூலதன உதவியாக 150 கோடி ரூபாயும், கடனுதவியாக 125 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*70.* மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணமின்றிப் பயணிப்பதற்காக, மூத்த குடிமக்களுக்கான பேருந்துப் பயண அட்டைத் திட்டத்தின்கீழ், இதுவரை 2.49 இலட்சம் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இம்மாமன்றத்திற்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நடப்பு நிதியாண்டில், மாணவர் பயணச் சலுகைக் கட்டண மானியமாக 505.35 கோடி ரூபாயும், (மேசையைத் தட்டும் ஒலி) டீசலுக்கான மானியமாக 200 கோடி ரூபாயும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் போக்குவரத்துத் துறைக்காக, 1,295.08 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-15*

## சுற்றுலா

*71.* உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் நமது மாநிலம் முதன்மை நிலையில் உள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தீவிர பிரச்சாரங்களின்மூலம் தமிழகத்திலுள்ள சுற்றுலாத் தலங்கள் மேலும் பிரபலப்படுத்தப்படும். நீர் விளையாட்டுகள், ஹெலி-சுற்றுலா போன்ற புதிய சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களை ஊக்குவிப்பதுடன், தற்போதுள்ள

பாரம்பரியச் சுற்றுலா, சமயச் சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா போன்ற பல்வேறு சுற்றுப்பயணத் திட்டங்களும் ஊக்குவிக்கப்படும். தனியார் முதலீடுகளைப் பெறுவதன்மூலம், அத்தகைய சுற்றுலா மையங்களில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும். உலகப் புகழ் பெற்ற சுற்றுலாத் தலங்களில், தல அருங்காட்சியகங்களும் (Site Museums), தகவல் மையங்களும் அமைக்கப்படும்.

72. ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு சுற்றுலா உட்கட்டமைப்பு மேம்பாட்டு முதலீட்டுத் திட்டத்தின்கீழ், மாநிலத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 33.62 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும், 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக 53.20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சுற்றுலாத் துறைக்கு மொத்தம் 85.80 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## இந்து சமய அறநிலையத் துறை

73. மாநிலத்திலுள்ள 724 கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அன்னதானத் திட்டம், 2016-2017 ஆம் ஆண்டில் மேலும் 30 கோயில்களுக்கு விரிவுபடுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பு நிதியாண்டில் 10 கோடி ரூபாய் செலவில் 500 கிராமக் கோயில்களிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள 500 கோயில்களிலும் பழுது நீக்கவும், புதுப்பிக்கவும் உரிய பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஐந்து ஆண்டுகளில், கோயில்களின் பொது நல நிதியைப் பயன்படுத்தி, 16.72 கோடி ரூபாய் செலவில், 143 கோயில்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளதோடு, மாநிலத்தில் பல்வேறு தேர்த் திருவிழாக்களை மீண்டும் நடத்துவதற்காக, கோயில் தேர்கள் புதுப்பித்தல் நிதியின்கீழ் 135 கோயில் தேர்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. ஒருகால பூஜை திட்டத்தின்கீழ், கடந்த ஐந்து ஆண்டுகளில், ஒவ்வொரு கோயிலுக்குமான வைப்பீட்டுத் தொகை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு, 12,504 கோயில்கள் பயனடைந்துள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

## தகவல் தொழில்நுட்பவியல்

*74.* தகவல் தொழில்நுட்பத்திற்கும், அது சார்ந்த சேவைகளுக்கும் (IT / ITeS) சென்னை ஒரு முக்கிய மையமாக உருவாகியுள்ளது. ஐம்பதிற்கும் மேலான பன்னாட்டு நிறுவனங்கள் (MNCs) சென்னையில் தங்களது உலக அளவிலான அலுவலகங்களை அமைத்துள்ளன. சென்னையிலிருந்து மேற்கொள்ளப்படும் மென்பொருள் தொடர்பான ஏற்றுமதிகள், ஆண்டிற்கு சராசரியாக 10 முதல் 12 சதவீத வளர்ச்சியடைந்து 2015-2016 ஆம் ஆண்டில் 95,000 கோடி ரூபாயை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டைத் தொடர்ந்து, அமெரிக்க நிறுவனமான ஃபோர்டு மோட்டார்ஸ் கம்பெனி தனது ஆராய்ச்சி மையத்தை சென்னையில் நிறுவுவதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அமெரிக்காவிற்கு வெளியே அந்த நிறுவனம் அமைக்கும் முதல் சர்வதேச மையம் இது என்பது சென்னைக்குப் பெருமை சேர்ப்பதாகும். *(மேசையைத் தட்டும் ஒலி* தென் தமிழகத்தில், தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டுக்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுத்துவரும் பல்வேறு முயற்சிகளால், ஹனிவெல், ஹெச்.சி.எல். டெக்னாலஜிஸ், ஜோஹோ நிறுவனம், சின்டெல் போன்ற நிறுவனங்கள், தென் தமிழ்நாட்டில் தங்களது அலுவலக வளாகங்களை அமைத்து வருகின்றன.

*பிற்பகல் 12-20*

*75.* அனைவருக்கும் சம வாய்ப்பு அளிப்பதற்காகவும், டிஜிட்டல் தொழில்நுட்ப இடைவெளியைக் குறைப்பதற்காகவும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் *(மேசையைத் தட்டும் ஒலி)* புதுமையான திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுத்தி வருகிறது. 2016-2017 ஆம் ஆண்டிலும் 5.35 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படுவதன் மூலம், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்காக 890 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**தொழில் வளர்ச்சி**

76. நாட்டிலேயே உற்பத்தி, வர்த்தகம் மற்றும் சேவைப் பணிகளுக்கு, முதலீட்டாளர்களால் மிகவும் விரும்பத்தக்க மாநிலமாகத் தமிழகம் முன்னேறி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதிக முதலீடுகளை ஈர்ப்பதற்காக, தொழில் புரிவதற்கு உகந்த சூழலை உருவாக்க பல முக்கிய முயற்சிகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொண்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்ப்பதற்கு, முதலீட்டு மானியங்கள், வரிவிலக்குகள் போன்ற ஊக்கச் சலுகைகளும், தொழிற் பூங்காக்கள், சாலை இணைப்புகள், சீரான மின்சாரம் வழங்கல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளும், நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட ஊக்கத் தொகுப்புகளாக வழங்கப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் முதலீட்டிற்கான சூழலை மேம்படுத்துவதற்கு, 'தமிழ்நாடு முதலீடு ஊக்குவிப்புத் திட்டத்தின்' இரண்டாம் கட்டத் திட்டத்தினைச் (Tamil Nadu Investment Promotion Programme Phase-II) செயல்படுத்த, 1,560 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்க ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை இசைவளித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

77. 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டு, 4.70 இலட்சம் (மேசையைத் தட்டும் ஒலி) நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் 2.42 இலட்சம் கோடி ரூபாய் அளவிலான தொழில் முதலீடுகளை ஈர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை, 23,258 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் செய்யப்பட்டு, 48,145 நபர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது போல, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்படும். அடுத்த மாநாடு 2017 ஆம் ஆண்டில் நடைபெற உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இது போன்ற மாநாடுகள் மாநிலத்தின் சிறப்புகளை உலகத்திற்குப் பறைசாற்றுவதுடன் முதலீடுகளை மேலும் ஈர்ப்பதற்கும், நிலையான, முழுமையான தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் ஏதுவாக அமையும்.

78. இராமநாதபுரம், புதுக்கோட்டை, திண்டுக்கல், சிவகங்கை, தேனி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஒன்பது தென் மாவட்டங்களில், 19,000 ஏக்கர் பரப்பளவில் தொழிற்சாலைகளுக்கான நில வங்கியை அமைப்பதற்கான அனைத்து

முயற்சிகளையும் (மேசையைத் தட்டும் ஒலி) சிப்காட் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. மதுரை-தூத்துக்குடி தொழில் வழித்தடத் திட்டம், ஒரு இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் 25,000 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை ஈர்த்திட உதவும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முன்முயற்சியாக, மதுரை-தூத்துக்குடி தொழில் வழித்தட மேம்பாட்டுக் கழகம் எனும் சிறப்பு நோக்கு முகமையை சிப்காட் நிறுவனம் அமைத்துள்ளதுடன், இத்திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தும் பணிகளையும் விரைவுபடுத்தியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

79. சென்னை-பெங்களூரு தொழில் வழித்தடத் திட்டத்தின்கீழ், பொன்னேரி தொழில் முனையத்தை தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலமாக (NIMZ) மேம்படுத்துவதற்கான பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் (TIDCO), சிப்காட் நிறுவனத்துடன் இணைந்து, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் சுமார் 306 ஏக்கர் பரப்பளவில் பாலிமர் தொழிற் பூங்காவினை 294 கோடி ரூபாய் செலவில் அமைத்து வருகிறது. இப்பூங்காவில், சிறு மற்றும் நடுத்தர பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்யும் 84 அலகுகள் இடம் பெறும். ஸ்ரீபெரும்புதூர் வட்டம், வல்லம் வடகாலில் அமைந்துள்ள சிப்காட் தொழிற் பூங்காவில் சுமார் 250 ஏக்கர் பரப்பளவில் வான்வெளிப் பூங்கா (Aerospace Park) அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வானூர்தி வடிவமைப்பு, வானூர்திகளுக்கான உதிரிப் பாகங்கள் தயாரிப்பு, பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் வசதிகளுடன் இப்பூங்கா செயல்படும்.

80. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தொழிற் துறைக்காக 2,104.49 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள்

81. அதிக அளவில் வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய திறன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறைக்கு உள்ளதால், முதலீடுகளை அதிகரித்தல், உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், தொழில்நுட்பங்களை மேம்படுத்தவும், செயல்திறனை மேம்படுத்தவும் எடுக்கப்படும் முயற்சிகளை ஊக்குவித்தல் போன்ற பணிகளை சிறப்பாகச் செய்ய, சிறப்பு நோக்கு பெருந்திட்டங்களில் ஒன்றாக, இத்துறையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு

அடையாளம் கண்டுள்ளது. உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கையெழுத்திடப்பட்ட 10,073 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இதுவரை, 3,029 ஒப்பந்தங்கள்மூலம் (மேசையைத் தட்டும் ஒலி) 2,599.93 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் பெறப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

82. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பெறும் கடன்களுக்கு மூன்று சதவீத வட்டி மானியம் வழங்குவதுடன், அதிகபட்சமாக 30 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் 25 சதவீதம் முதலீட்டு மானியத்தையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடர்ந்து வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) தொழிற் கூட்டமைப்புகளின் மூலமாக உருவாக்கப்படும் தனியார் தொழிற் குழுமங்களை ஊக்குவித்து, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடர்ந்து நிதியுதவி அளிக்கும். 2016-2017 ஆம் ஆண்டிற்கு, வட்டி மானியத்திற்காக 12 கோடி ரூபாயும், கட்டமைப்பிற்கான நிதியுதவியாக 60 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

83. 'வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம்' (Unemployed Youth Employment Generation Programme) மற்றும் 'பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' (Prime Minister's Employment Generation Programme) ஆகிய திட்டங்களின்கீழ், தொழில்முனைவோர்களுக்கு தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (Entrepreneurship Development Institute) பயிற்சி அளித்து வருகிறது. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின்கீழ், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மட்டும் 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் மொத்தமாக இத்திட்டத்திற்கு 30 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

84. முதல் தலைமுறை தொழில்முனைவோரை ஊக்கப்படுத்த, மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் தொடங்கப்பட்ட முன்னோடித் திட்டம் 'புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் மேம்பாட்டுத் திட்டம்' (New Entrepreneurship-cum-Enterprise Development Scheme) ஆகும். தமிழகத்தில் புதிய தொழில் தொடங்குவதற்கான துடிப்பான சூழலை (Vibrant Start-up Environment) ஏற்படுத்துவதற்காக, ஒரு கோடி ரூபாயை இதற்கென

இத்திட்டத்தில் ஒதுக்கி ‘ஆரம்ப செயல்திட்ட’ நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அவற்றை கல்வி நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*85.* குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறைக்கு, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 348.22 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

## கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

*86.* விலையில்லா சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 2017 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது, 167.89 இலட்சம் சேலைகளும் *(மேசையைத் தட்டும் ஒலி)* 167.81 இலட்சம் வேட்டிகளும் வழங்கப்படும். கைத்தறி ஆடைகள் அணிவதை ஊக்குவிப்பதற்காகவும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிப்பதை உறுதி செய்வதற்காகவும் ‘தள்ளுபடி மானியத் திட்டம்’ இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், விலையில்லா சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டத்திற்காக 487.45 கோடி ரூபாயும், தள்ளுபடி மானியத்திற்காக 78.45 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*87.* இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்காக 1,129.74 கோடி ரூபாயும், கைத்திறன் மற்றும் கதர்த் துறைக்காக 174.27 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

## ஊரக வளர்ச்சி

*88.* வீட்டு வசதி, இணைப்புச் சாலைகள், குடிநீர், பொதுக் கட்டடங்களைக் கட்டுதல், புதுப்பித்தல் போன்ற திரளான திட்டங்களின்மூலம் உட்கட்டமைப்பின் தரத்தை மேம்படுத்தி, ஊரகப் பகுதிகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டமாகும். பாராட்டுதலுக்குரிய

முன்முயற்சியான தமிழ்நாடு கிராமப்புற குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 12,524 ஊராட்சிகளில் அமைந்துள்ள 79,394 குடியிருப்புப் பகுதிகளிலும் தேவையான அடிப்படை வசதிகள் செய்து முடிக்கப்பட்டது ஒரு மாபெரும் சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) மாநில நிதிக் குழு மானியங்களின்மூலம் கிடைக்கப்பெறும் நிதி ஆதாரங்களை ஒருங்கிணைத்து, அடிப்படை வசதிகளை மேம்படுத்த இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பிற்பகல் 12-30

89. 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை' (MGNREGS) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. தேசிய அளவிலான பல்வேறு விருதுகளை ஆண்டுதோறும் தமிழகத்திற்கு வழங்கி, மத்திய அரசு, மாநில அரசின் செயல்பாடுகளுக்கு உரிய அங்கீகாரம் அளித்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கிராமப்புறங்களில் பண்ணைக் குட்டைகள் அமைத்தல், கழிவறைகள் கட்டுதல், மரம் நடுதல், கோழிகள் மற்றும் கால்நடைகள் வளர்ப்புக் கொட்டகைகள் அமைத்தல் போன்ற சொத்துகளை உருவாக்கும் பணிகளில் இத்திட்ட நிதியை மாநில அரசு பயன்படுத்தி வருகிறது. இம்முயற்சிகளைப் பாராட்டி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ், (மேசையைத் தட்டும் ஒலி) 'சிறந்த செயல்பாடுகளை வெளிப்படுத்தியதற்கான விருதினை' 2015-2016 ஆம் ஆண்டிலும் தமிழகம் பெற்றுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்காக 7,155 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

90. 'ஒருங்கிணைந்த பள்ளிக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்' (Comprehensive School Infrastructure Development Scheme) கீழ், கிராமப்புறப் பகுதிகளிலுள்ள ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் புதிய கட்டடங்கள், சமையற் கூடங்கள், குடிநீர் வழங்கல், கழிவறைகள் முதலான அடிப்படை உட்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. 2016-2017 ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். பல்வேறு திட்ட நிதிகளை ஒருங்கிணைத்து சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான பணிகளை மேற்கொள்ள, 2015-2016 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட 'தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்',

2016-2017 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2015-2016 ஆம் ஆண்டில், 'பிரதம மந்திரி கிராமப்புற சாலைகள் திட்டத்தின்' (PMGSY) ஒன்பதாவது கட்டப் பணிகள் 357.12 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், இத்திட்டத்தின் பத்தாவது கட்டப் பணிகளாக 758.44 கோடி ரூபாய் செலவில் 573 சாலைகளின் மேம்பாட்டுப் பணிகளும், 22 பாலப் பணிகளும் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

91. 'சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்' (MLACDS) கீழ், 2016-2017 ஆம் ஆண்டிற்கு 470 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

92. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஊரக வளர்ச்சித் துறைக்கான ஒதுக்கீடு 21,186.58 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## நகராட்சி நிருவாகம்

93. நகர்ப்புறங்களில் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்கும், அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும் 2011-2012 ஆம் ஆண்டில் 'ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு இயக்கம்' (Integrated Urban Development Mission) மற்றும் 'சென்னைப் பெருநகர மேம்பாட்டு இயக்கம்' (Chennai Mega City Development Mission) ஆகிய முன்னோடித் திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். நிதி ஆதாரங்களை ஒருங்கிணைத்து தலா 500 கோடி ரூபாய் அளவில், இத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். நடைபெற்று வரும் பணிகள் உட்பட, ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு இயக்கத்திற்காக 886 கோடி ரூபாயும், சென்னைப் பெருநகர மேம்பாட்டு இயக்கத்திற்காக 800 கோடி ரூபாயும் இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

94. 'திறன்மிகு நகரங்கள் திட்டத்தின்' (Smart Cities) கீழ், சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்கள் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் ஐந்து ஆண்டுகளுக்கு, இந்த மாநகராட்சிகளுக்கு ஒவ்வோர் ஆண்டிற்கும் மத்திய அரசிடமிருந்து

தலா 100 கோடி ரூபாய் நிதியுதவி கிடைக்கப்பெறும். இதற்குச் சமமான நிதியை மாநில அரசு தன் பங்காக வழங்கும். 'அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டத்தின்' (Atal Mission for Rejuvenation and Urban Transformation) கீழ், 2015-2016 ஆம் ஆண்டில் 32 நகரங்களில் 3,316.22 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 2016-2017 ஆம் ஆண்டில் 3,834.49 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், திறன்மிகு நகரங்கள் திட்டத்திற்காக 400 கோடி ரூபாயும், அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டத்திற்கு 500 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

95. தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, 3,831 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்' (Tamil Nadu Sustainable Urban Development Programme) தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 2,212.89 கோடி ரூபாய் செலவில் எட்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 13 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கென, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 399.39 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

96. முக்கிய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், பாதாள சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களது அரசு சிறப்பு முன்னுரிமை அளித்து வருகிறது. இருபது பாதாள சாக்கடைத் திட்டங்கள் 14.41 இலட்சம் மக்களுக்குப் பயனளிக்கூடிய வகையில், 1,017.09 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றுடன், 205.23 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மூன்று பாதாள சாக்கடைத் திட்டங்கள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன. இப்பணிகள் இவ்வாண்டில் தொடங்கப்படும்.

97. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நகராட்சி நிருவாகத்திற்கு மொத்தமாக 11,820 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-35*

**ஏழைகளுக்கான வீட்டுவசதி**

*98. தமிழ்நாட்டில் குடிசைகளற்ற கிராமங்களையும், குடிசைப் பகுதிகளற்ற நகரங்களையும் உருவாக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு, ஏழைகளுக்கான வீட்டுவசதி வழங்கும் மாநில இயக்கத்தின்கீழ், வீட்டுவசதித் திட்டங்களை ஒருங்கிணைத்து மிகப்பெரிய அளவில் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முடிவு செய்துள்ளது. ஆற்றல்மிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது தலைமையிலான இந்த அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், பல்வேறு திட்டங்களின்கீழ் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 10 இலட்சம் வீடுகளைக் கட்ட நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*99. 'பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின் (ஊரகம்)'* (Pradhan Mantri Awaas Yojana - Rural) *கீழ், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடு ஒன்றுக்கு 70,000 ரூபாய் மதிப்பீட்டில் 45,788 வீடுகளை சிறப்பு ஒதுக்கீடாகவும், வீடு ஒன்றுக்கு 1.20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1,31,831 வீடுகளை வழக்கமான ஒதுக்கீடாகவும் மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் 40 சதவீதம் நிதிப் பகிர்வு மாநில அரசின் பங்காகும். எனினும், வீடுகளுக்கான நிதி ஒதுக்கீடு ஒரே சீராக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில், கூரை அமைப்பதற்கு 50,000 ரூபாயைக் கூடுதலாக வழங்கி, அனைத்து வீடுகளுக்குமான மதிப்பீட்டுத் தொகையை (மேசையைத் தட்டும் ஒலி) வீடு ஒன்றுக்கு 1.70 இலட்சம் ரூபாயாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பெருந்தன்மையுடன் உயர்த்தியுள்ளார்கள். எனவே, இத்திட்டத்தின்கீழ், கிராமப்புறப் பகுதிகளில் 3,095.62 கோடி ரூபாய் செலவில் 1,77,619 வீடுகளை 2016-2017 ஆம் ஆண்டிலேயே மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இதில், 1,908.47 கோடி ரூபாய் மாநில அரசின் பங்காக இருக்கும். பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்தின் (ஊரகம்) கீழ் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சூரிய ஒளி மின்வசதி கொண்ட பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ், 2016-2017 ஆம் ஆண்டில் 420 கோடி ரூபாய் செலவில் 20,000 பசுமை வீடுகள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*100.* குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களின் மறுவாழ்விற்காகவும், நகர்ப்புறத்தில் வாழும் வீடில்லா ஏழை மக்களுக்கு வீட்டு வசதி வழங்கவும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், கடந்த ஐந்து ஆண்டுகளில், 2,753.42 கோடி ரூபாய் செலவில், 59,023 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 10,537 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. இம்முயற்சிகளைத் தொடர, 2016-2017 ஆம் ஆண்டில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்மூலம், 23,476 வீடுகளைக் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், நகர்ப்புறங்களில் வாழும் ஏழைக் குடும்பங்களை மறுகுடியமர்த்துவதற்கான வீட்டுவசதித் திட்டங்களுக்கு நிதி வழங்க, ஒரு சிறப்பு நிதியமாக 'வீட்டுவசதி நிதியத்தை' (Shelter fund) மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஏற்படுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி) 'அனைவருக்கும் வீட்டு வசதி' திட்டத்திற்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 689 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**தூய்மைத் தமிழகத்திற்கான இயக்கம்**

*101.* தூய்மையான கிராமங்கள் மற்றும் நகரங்களை உருவாக்கும் நோக்கத்துடன், 'தூய்மைத் தமிழகத்திற்கான இயக்கத்தை' மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடங்கியுள்ளது. இந்த இயக்கத்தின்மூலம் கழிவறைகளை உபயோகிப்பதற்கான விழிப்புணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்துவதுடன், சிறப்பான முறையில் திடக்கழிவு மேலாண்மையைச் செயல்படுத்தவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். தமிழ்நாட்டில் சுகாதாரத்தை மேம்படுத்தவும், திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை அறவே ஒழிக்கவும், 'தூய்மை இந்தியா இயக்கத்தின்' (Swachh Bharat Mission) கீழ் பெறப்படும் நிதி ஆதாரங்களுடன் மாநிலத் திட்ட நிதிகளும் ஒருங்கிணைக்கப்படும்.

*102.* 'தூய்மை இந்தியா இயக்கத்தின் (ஊரகம்)'கீழ் 2016-2017 ஆம் ஆண்டில் 7.66 இலட்சம் வீட்டுக் கழிவறைகளும், 50 பொது சுகாதார வளாகங்களும் கட்டப்படும். கழிவறைகளை அமைத்து, அவற்றைத் தொடர்ந்து பயன்படுத்துவதை மக்களிடம் ஊக்கப்படுத்தும் பணியில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள சுய உதவிக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில், 9,000 கிராம ஊராட்சிகளில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்துடன் இணைக்கப்பட்டு,

ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இம்முயற்சிக்கு வலுசேர்க்க 52,998 தூய்மைக் காவலர்கள் அமர்த்தப்பட்டு, 22,704 மூன்று சக்கர மிதிவண்டிகள் வழங்கப்பட்டு, அக்கிராமங்களில் குப்பைகளை சேகரித்தல், பிரித்தல் மற்றும் அகற்றுதல் பணியில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 2016-2017 ஆம் ஆண்டில், மீதமுள்ள 3,524 கிராம ஊராட்சிகளிலும், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, அனைத்து ஊரகப் பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மை நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். மாநில அரசால் உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதியிலிருந்து, திடக்கழிவு மேலாண்மைக்காக 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-40*

*103.* தற்போது, 402 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 833.22 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. நகர்ப்புறங்களில் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும், திடக்கழிவு மேலாண்மையை சிறப்பாகச் செயல்படுத்துவதற்காகவும், 'தூய்மை இந்தியா இயக்கத்தின் (நகர்ப்புறம்)'கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், நகரங்களின் தூய்மையைப் பராமரிப்பதற்காக, 2016-2017 ஆம் ஆண்டுக்கு, திடக்கழிவு மேலாண்மை நிதிக்கு, மாநில நிதிப் பகிர்வு மானியத்திலிருந்து 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

## குடிநீர் வழங்கல்

*104.* தமிழகம் போன்ற குடிநீர்ப் பற்றாக்குறை நிலவும் மாநிலத்தில் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதை உறுதி செய்வது சவால் நிறைந்த பணியாகும். இருப்பினும், பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்காகவும், நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்காகவும் அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், தென்சென்னையில் உள்ள பேரூரில் 3,227.84 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் திறனும், நெம்மேலியில் 1,258.88 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறனும் கொண்ட கடல்

நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களையும் முறையே, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை (JICA) மற்றும் ஜெர்மன் பன்னாட்டு நிறுவனம் (KfW) ஆகியவற்றின் நிதியுதவியுடன் நிறுவுவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் நடந்து வருகின்றன. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள தேர்வாய்க் கண்டிகையில் புதிய நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்டப் பணிகளும், சோழவரம், நேமம், போரூர் மற்றும் அயனம்பாக்கம் ஆகிய நான்கு ஏரிகளைப் புனரமைக்கும் திட்டப் பணிகளும் நிறைவடையும்போது குடிநீர்த் தேவை மற்றும் வழங்குதலுக்கு இடையே உள்ள இடைவெளி கணிசமாகக் குறையும். இதன்மூலம், சென்னைக்கு குடிநீர் வழங்குவதற்கான மொத்த நீர்த்தேக்கக் கொள்ளளவு 1,474 மில்லியன் கன அடியிலிருந்து 2,542 மில்லியன் கன அடியாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

105. தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டம் போன்ற குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டினை மத்திய அரசு பெருமளவில் குறைத்துள்ளபோதும், மாநில நிதியிலிருந்து பல்வேறு குடிநீர் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டத்திற்காக (National Rural Drinking Water Programme) 405.19 கோடி ரூபாயும், குறைந்தபட்ச தேவைகள் திட்டத்திற்காக (Minimum Needs Programme) 186.35 கோடி ரூபாயும், நபார்டு வங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தப்படும் குடிநீர்த் திட்டங்களுக்காக 450 கோடி ரூபாயும், 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

106. தற்போது, பதினொன்று முக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கான பணிகள் 2,888.26 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன. இத்துடன், 644.01 கோடி ரூபாய் செலவிலான 18 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்துவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை மட்டுமல்லாமல், 480.76 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 22 நகர்ப்புற குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 2016-2017 ஆம் ஆண்டில் 373.82 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நான்கு நகர்ப்புற குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-45*

## உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வு

*107.* உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை மேம்படுத்துவதற்காகவும், அவை சுய சார்புடைய அமைப்புகளாக செயல்படுவதற்காகவும், மாநிலத்தின் சொந்த வரி வருவாயிலிருந்து அவற்றிற்கு மானியமாக நிதி பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. நான்காவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், மாநிலத்தின் சொந்த வரி வருவாயிலிருந்து கிராமப்புற மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடப்பு நிதியாண்டில் பகிர்ந்தளிப்பதற்காக முறையே, 4,995.66 கோடி ரூபாயும், 3,617.55 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பதினான்காவது மத்திய நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி, நமது மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொதுவான அடிப்படை நிதியுதவியாக 2,406.14 கோடி ரூபாயும், பொதுவான செயல்பாட்டு நிதியுதவியாக 494.99 கோடி ரூபாயும் நடப்பு நிதி ஆண்டில் கிடைக்கும். 2016-2017 ஆம் ஆண்டிற்கு, தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு மொத்தமாக 11,514.34 கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) நிதிக் குழுக்களின் நிதியுதவியாகக் கிடைக்கும். இது கடந்த ஆண்டைவிட 2,163.24 கோடி ரூபாய் அதிகமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

## உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள்

*108.* உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் வருகின்ற அக்டோபர் மாதம் நடைபெற உள்ளது. மகளிர் மேம்பாட்டின் முக்கியத்துவத்தைக் கருதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டினை 50 சதவீதமாக உயர்த்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்காக 183.24 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

*109.* நாற்பத்து ஐந்து கிலோமீட்டர் நீளமுள்ள சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதற்கட்டப் பணிகளில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றம் மகிழ்ச்சியளிக்கிறது. கோயம்பேட்டில் இருந்து ஆலந்தூர் வரையிலான 10.15 கிலோ மீட்டர் நீளமுள்ள

உயர்த்தப்பட்ட வழித்தடத்தில் ஏற்கெனவே பயணிகள் சேவைகள் தொடங்கப்பட்டுள்ள நிலையில், சின்னமலை முதல் விமான நிலையம் வரையிலும், ஆலந்தூர் முதல் பரங்கிமலை வரையிலுமான மீதமுள்ள உயர்த்தப்பட்ட வழித்தடங்களிலும் பயணிகள் சேவைகள் விரைவில் தொடங்கும். நடப்பாண்டு இறுதிக்குள், முதலாவது சுரங்க வழித்தடத்தில் பயணிகள் சேவைகள் தொடங்கப்படும்.

110. வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர்/விம்கோ நகர் வரையில், 3,770 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சென்னை மெட்ரோ இரயிலின் முதல் வழித்தடத்தை நீட்டிப்பதற்கு மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) அயராத முயற்சிக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மெட்ரோ இரயில் நீட்டிப்புத் திட்டம் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் கடனுதவி சுழற்சித் திட்டத்தில் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், 104.50 கிலோ மீட்டர் நீளமுள்ள இரண்டு வழித்தடங்களை உள்ளடக்கிய மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான திட்ட அறிக்கையை விரைவில் தயாரித்து செயலாக்கத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கொண்டு வரும். (மேசையைத் தட்டும் ஒலி இந்த முயற்சிகளின் மூலமாக, சென்னையில் உள்ள மெட்ரோ இரயில் போக்குவரத்து மேலும் வலுப்படுத்தப்பட்டு, உலகத் தரம் வாய்ந்த போக்குவரத்து அமைப்பை சென்னை நகரம் பெறும் என நான் நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## மக்கள் நல்வாழ்வு

111. அனைத்து மக்களும் பொது சுகாதார சேவையை எளிதில் பெறுவதை உறுதி செய்ய, 2016-2017 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு 37 ஆரம்ப சுகாதார நிலையங்களைப் புதிதாக அமைப்பதுடன், ஏற்கெனவே இயங்கிவரும் 24 ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தும். கடலூர் மற்றும் திருப்பூரில் தலா 20 கோடி ரூபாய் செலவில் புதிய மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவுகளை ஏற்படுத்துவது; தலா 10 கோடி ரூபாய் செலவில் தாம்பரம், கிருஷ்ணகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் உள்ள விபத்து சிகிச்சை மையங்களை வலுப்படுத்துவது

உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 'தேசிய சுகாதாரத் திட்டத்தின்' (National Health Mission) கீழ் 1,423.38 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-50

112. அரசு மருத்துவமனைகளில் இரண்டாம் நிலை (Secondary) மற்றும் உயர்நிலை மருத்துவ வசதிகளை (Tertiary Health Care) மேம்படுத்துவதற்காக, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன் 1,634 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 'தமிழ்நாடு நகர்ப்புற மருத்துவக் கட்டமைப்புத் திட்டத்தை' மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், ஏழு மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் நான்கு இதர அரசு மருத்துவமனைகளுக்கு உலகத் தரம் வாய்ந்த நோய் கண்டறியும் கருவிகள் மற்றும் கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டு, அவற்றின் செயல்திறன் வலுப்படுத்தப்படும். 'மரணமடைந்தவர்களின் உடல் உறுப்புகளைப் பயன்படுத்தி, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில்' மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, நாட்டிலேயே முதன்மை மாநிலம் என்ற (மேசையைத் தட்டும் ஒலி) தேசிய விருதினை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பெற்றுள்ளது. இதுவரை, 828 உடல் உறுப்பு கொடையாளிகளிடமிருந்து 2,652 முக்கிய உறுப்புகள் தானமாகப் பெறப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) நோயாளிகளுக்குப் பொருத்தப்பட்டுள்ளன.

113. 'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்', 1.58 கோடி குடும்பங்கள், தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் தரமான உயர்நிலை மருத்துவ வசதிகள் பெறுவதை உறுதி செய்துள்ளது. இதுவரை, 3,192 கோடி ரூபாய் செலவில் 15.41 இலட்சம் நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தில் அரசு மருத்துவமனைகள் இதுவரை ஈட்டியுள்ள 1,138 கோடி ரூபாய் வருவாய்மூலம் மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 928 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

114. மாநிலத்தில் சிசு இறப்பு விகிதம் மற்றும் மகப்பேறு இறப்பு விகிதங்களை குறைப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்' கீழ் 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை, 34.57 இலட்சம் கர்ப்பிணிப் பெண்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 3,239 கோடி ரூபாய் நிதியுதவி பெற்று பயனடைந்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்காக 668 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆண்டொன்றுக்கு 61 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன், மகளிர் சுகாதாரத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் புதுமையான நலத் திட்டங்களான 'அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம்', (மேசையைத் தட்டும் ஒலி) 'அம்மா மகப்பேறு சஞ்சீவி'(மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் 'அம்மா ஆரோக்கியத் திட்டம்' (மேசையைத் தட்டும் ஒலி) ஆகியவையும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

115. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மக்கள் நல்வாழ்வுத் துறைக்காக 9,073 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**பள்ளிக் கல்வி**

116. மாநிலத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் எளிய வகையில் தரமான கல்வியை வழங்க வேண்டும் என்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையாகும். புவியியல் தகவல் முறைமையின்படி (Geographic Information System) தயாரிக்கப்பட்ட பள்ளி இருப்பிட வரைபடச் செயலி உதவியுடன் புதிய பள்ளிகளைத் தொடங்குதல், இயங்கிவரும் பள்ளிகளைத் தரம் உயர்த்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் குழந்தைகள் அனைவரும் பள்ளிகளில் சேர்க்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம், தொடக்கப் பள்ளிகளில் 1:25 ஆகவும், நடுநிலைப் பள்ளிகளில் 1:24 ஆகவும், உயர்நிலைப் பள்ளிகளில் 1:26 ஆகவும், மேல்நிலைப் பள்ளிகளில் 1:37 ஆகவும் மேம்படுத்தப்பட்டு, தேசிய அளவுகோலான, முறையே 1:30, 1:35, 1:40 மற்றும் 1:45 என்ற விகிதாச்சாரங்களைவிட சிறப்பாக உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

*117.* பள்ளிகளில் போதுமான அளவிற்கு கழிவறை வசதிகள் செய்து தரப்படுவதற்கும், அவை சிறப்பான முறையில் பராமரிக்கப்படுவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். கடந்த ஐந்தாண்டுகளில் மேற்கொண்ட முயற்சிகளின் தொடர்ச்சியாக, 2016-2017 ஆம் ஆண்டில் 59.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 4,339 கழிவறைகள் அமைத்துத் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) கழிவறைகளைப் பராமரிப்பதற்காக மட்டும், 2015-2016 ஆம் ஆண்டில் 57.63 கோடி ரூபாயை உள்ளாட்சி அமைப்புகள்மூலம் வழங்கி, அனைத்துப் பள்ளிகளிலும் உள்ள கழிவறைகள் சுத்தமாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்ற நெடுநாள் தேவையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவு செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம், 2016-2017 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இம்முன் முயற்சி மத்திய அரசால் பாராட்டப்பட்டுள்ளது மட்டுமல்லாமல், பிற மாநிலங்களும் இதனை முன்மாதிரியாகப் பின்பற்ற மத்திய அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) நபார்டு வங்கிக் கடன் உதவியுடன் வகுப்பறைகள், கழிவறைகள் மற்றும் குடிநீர் வசதிகள் போன்ற பள்ளிக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக, இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 333.61 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-55*

*118.* குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ், சமுதாயத்தில் பின்தங்கிய மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவுகளைச் சார்ந்த 2,31,404 குழந்தைகள் இதுவரை தனியார் பள்ளிகளில் கல்வி பயின்றிட மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பாண்டில், 86,199 குழந்தைகள் தனியார் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதற்காக, இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 125.70 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

*119.* 'அனைவருக்கும் கல்வி இயக்கம்' (Sarva Shiksha Abhiyan), 'அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கம்' (Rashtriya Madhyamik Shiksha Abhiyan) ஆகியவற்றிற்கு 2015-2016 ஆம் ஆண்டுக்குரிய

மத்திய அரசின் பங்குத் தொகையான 848 கோடி ரூபாய் இதுவரை வரப்பெறாத நிலையிலும், இந்த இயக்கங்கள் திறம்பட செயல்படுவதை உறுதி செய்வதற்கு மாநில அரசே தேவையான நிதியை தொடர்ந்து வழங்கி வருகிறது. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், அனைவருக்கும் கல்வி இயக்கத்திற்காக 2,329.15 கோடி ரூபாயும், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கத்திற்காக 1,139.52 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

120. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினிகள், விலையில்லா பாடப் புத்தகங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) நோட்டுப் புத்தகங்கள், கல்வி உபகரணங்கள், நான்கு சீருடைத் தொகுப்புகள், காலணிகள், புத்தகப் பைகள், பேருந்துக் கட்டணச் சலுகைகள், மிதிவண்டிகள் போன்றவற்றைத் (மேசையைத் தட்டும் ஒலி) தொடந்து வழங்கும். இதற்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,705 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

121. மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொண்ட இம்முயற்சிகளின் விளைவாக, இடைநிற்றல் விகிதம் தொடக்க நிலையில் 0.90 அளவாகவும், நடுநிலையில் 1.55 அளவாகவும், இடைநிலையில் 3.76 அளவாகவும் 2015-2016 ஆம் ஆண்டில் குறைந்துள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பத்து, பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளில் மாணவிகளின் இடைநிற்றலை மேலும் குறைக்கும்பொருட்டு, சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 381 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

122. பள்ளிக் கல்விக்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்தமாக 24,130 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி)

**உயர் கல்வி**

*123. நாட்டின் அறிவுசார் தலைநகரமாகவும், புதிய கண்டுபிடிப்புகளுக்கான மையமாகவும் தமிழகத்தை மாற்றுவதற்கு பல்வேறு முயற்சிகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுத்து வருகிறது. உயர் கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதத்தை உயர்த்தவும், குறிப்பாக பெண்கள் எளிதாக உயர் கல்வியின் பயனைப் பெறவும், தேவையான பகுதிகளில் புதிய கல்லூரிகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடங்கும். மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் எடுக்கப்பட்ட பல்வேறு சிறப்பு முயற்சிகள் தற்போது பலன்களை அளித்து வருகின்றன. உயர் கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதம் 44.80 சதவீதமாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, பெண்கள் மற்றும் ஆதி திராவிடர் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களின் உயர் கல்விச் சேர்க்கை 2010-2011 ஆம் ஆண்டில் முறையே 2,51,211 மற்றும் 84,660-ல் இருந்து, 2015-2016 ஆம் ஆண்டில் முறையே 3,01,110 மற்றும் 1,36,877 ஆக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்விச் சேர்க்கை விகிதத்தில் ஏற்பட்டுள்ள இத்தகைய குறிப்பிடத்தக்க உயர்வு மகிழ்ச்சியளிக்கிறது. கல்வியில் பின்தங்கிய குடும்பங்களிலிருந்து உயர் கல்வி பயிலும் மாணவ மாணவியர்களை ஊக்குவிக்க, முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்குக் கல்விக் கட்டணத்தைத் திரும்ப வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 582.58 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 233 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*பிற்பகல் 1-00*

*124. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு 152.97 கோடி ரூபாய் உட்பட, அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் மானியம் வழங்குவதற்காக, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்தமாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு 357.12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், உயர் கல்வித் துறைக்கென மொத்தமாக 3,679.01 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு

*125.* மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையின்கீழ், இந்த அரசு, விளையாட்டிற்கான கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டிற்கு மிகப்பெரிய உந்துதலை அளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) உதகமண்டலத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் “மலை மேலிட விளையாட்டுப் பயிற்சி மையம்” அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இது தவிர, 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை வேளச்சேரியில் உள்ள நீச்சல் வளாகத்தின் சீரமைப்புப் பணி நடைபெற்று வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்ட அளவில் 15 பல்நோக்கு விளையாட்டரங்கங்கள் அமைப்பதற்காக 25.12 கோடி ரூபாயும், (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்ட விளையாட்டு வளாகங்களைப் புனரமைப்பதற்காக 10.50 கோடி ரூபாயும், முதலமைச்சரின் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்காக 30.19 கோடி ரூபாயும், (மேசையைத் தட்டும் ஒலி) 12,524 கிராம ஊராட்சிகளில் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்காக 75.15 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.(மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், விளையாட்டு மற்றும் விளையாட்டு தொடர்பான பணிகளுக்கென 153.39 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

*126.* இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கு (Scheduled Castes Sub Plan) 12,462 கோடி ரூபாயும், பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கு (Tribal Sub Plan) 722 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவை, ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டில் முறையே 20.56 மற்றும் 1.19 சதவீதங்களாகும்.

*127.* தற்போது, ஆதி திராவிடர் நலத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 98,039 மாணவ, மாணவியர்கள் தங்கிப் படிப்பதற்கு 1,314 விடுதிகளும், பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 2,782 மாணவ, மாணவியர்கள் தங்கிப் படிப்பதற்கு 42 பழங்குடியினர் விடுதிகளும், 30,933 மாணவ, மாணவியர்கள் தங்கிப் பயில்வதற்கு 306 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன.

தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளில், 81 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 24 விடுதிகளுக்கான புதிய கட்டடங்கள் கட்டும் பணிகள் 27.48 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், மாநிலத்தில் உள்ள அனைத்து விடுதிகளும் அரசுக் கட்டடங்களில் இயங்கும் நிலை உறுதி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்த இரண்டு ஆண்டுகளில், அனைத்து விடுதிகளுக்கும் இட்லி குக்கர்-நீராவிக் கொதிகலன்கள் மற்றும் சலவை இயந்திரங்களை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கும். இதன்மூலம், மற்றுமொரு தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், உணவு வழங்குவதற்கான தொகையாக 103.15 கோடி ரூபாயும், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் விடுதிப் பராமரிப்புக்காகவும் 83.80 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

128. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண் குழந்தைகளின் பள்ளிச் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்கும் நோக்குடன், பள்ளிகளில் பயிலும் பெண் குழந்தைகளுக்கு ஊக்க உதவித் தொகை வழங்குவதற்காக 2016-2017 ஆம் ஆண்டில் 55.11 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உயர் கல்வி உதவித் தொகைத் திட்டத்தை தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களுக்கும் நீட்டித்ததன் பலனாக, 2015-2016 ஆம் ஆண்டில் 7.76 இலட்சம் மாணவ, மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வி உதவித் தொகைத் திட்டங்களுக்கு முறையே 75.61 கோடி ரூபாயும், 1,429.94 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-05

129. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்திட இந்தத் திருத்த

வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 64.86 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

130. ஆதி திராவிடர்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காக வருவாய் ஈட்டக்கூடிய தொழில்களைச் செய்வதற்காக தாட்கோ நிறுவனம் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்திற்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கு மத்திய சிறப்பு உதவித் திட்டத்தின் (Special Central Assistance) கீழ், 130 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

131. 'ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்' (Comprehensive Tribal Development Programme), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2011-2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும், அவர்கள் வருவாய் ஈட்டும் தொழில்களை மேற்கொள்ள உதவுவதற்காகவும், 2016-2017 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 50 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 12 கோடி ரூபாய் செலவில், நபார்டு வங்கி கடனுதவியுடன் வனத் துறையால் நடத்தப்படும் பழங்குடியினருக்கான பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். மாநிலத்தில் வாழும் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக 28.80 கோடி ரூபாயும், 'வனபந்து கல்யாண் யோஜனா திட்டத்தைச்' செயல்படுத்துவதற்காக 7 கோடி ரூபாயும் இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்

132. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 6.96 இலட்சம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியர்களுக்கு, பள்ளிக் கல்விக்கான உதவித் தொகை வழங்க 21.40 கோடி ரூபாயும், உயர் கல்விக்கான உதவித் தொகை வழங்க 186.56 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

133. தற்போது, 84,314 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியர்கள்

தங்கிப் பயன்பெறும் 1,338 தங்கும் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 1,195 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. 107 விடுதிகளுக்கான புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 36 விடுதிகளுக்கு 2016-2017 ஆம் ஆண்டில் 76.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்பட்டு, அனைத்து விடுதிகளும் அரசுக் கட்டடங்களில் இயங்கும் நிலை உறுதி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்த இரண்டு ஆண்டுகளில், அனைத்து விடுதிகளுக்கும் இட்லி குக்கர்-நீராவிக் கொதிகலன்கள் மற்றும் சலவை இயந்திரங்கள் வழங்கப்படும். 2016-2017 ஆம் ஆண்டில் உணவு வழங்குவதற்கான தொகையாக 70.64 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

134. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பதினொன்றாவது வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் இதர பிரிவுகளைச் சேர்ந்த மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்காக இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 168.04 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

135. மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இயங்கிவரும் 290 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்காக இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 104.40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## தொழிலாளர் நலன்

136. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் உட்பட 17 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுவரை பல்வேறு அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் 66.97 இலட்சம் தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பிற மாநிலங்களைச் சேர்ந்த 16,684 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 2015-2016 ஆம் ஆண்டில் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் உறுப்பினர்கள் 125.90 கோடி ரூபாய் அளவிற்கான சமூகப் பாதுகாப்பு பலன்களைப் பெற்றுள்ளனர். இணையம் மூலமாக

அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவு செய்து, நலத் திட்டப் பலன்களை அவர்கள் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களுக்கு மானியம் வழங்குவதற்காக 70 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இத்துறைக்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 152.76 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 1-10

**சமூக நலன்**

137. பெண்கள், குழந்தைகள், திருநங்கைகள், முதியோர் மற்றும் ஆதரவற்றோர் போன்ற சமுதாயத்தில் எளிதில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய பிரிவினரின் பாதுகாப்பிற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் எண்ணற்ற பல நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1992 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவங்கப்பட்ட 'பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்', *(மேசையைத் தட்டும் ஒலி)* 'தொட்டில் குழந்தைத் திட்டம்' *(மேசையைத் தட்டும் ஒலி)* போன்ற முன்னோடித் திட்டங்கள், கைவிடப்பட்ட குழந்தைகளுக்கு உரிய பாதுகாப்பினை வழங்கியுள்ளன. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டங்களுக்காக 140.50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

138. திருமண உதவித் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் திருமாங்கல்யத்திற்கான தங்கத்தை நான்கு கிராமிலிருந்து எட்டு கிராமாக *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே உயர்த்தியுள்ளார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இத்திட்டம், பெண்கள் உயர் கல்வி பயில்வதை ஊக்குவித்து, இளம் வயது திருமணங்களைத் தடுத்து, பொருளாதார அடிப்படையில் அவர்கள் விடுதலை அடைய வழிவகுக்கும். இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், அனைத்து திருமண உதவித் திட்டங்களுக்காகவும் 703.16 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*139. 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின்' கீழ், ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம் வழங்கப்பட்டு, தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 26.88 இலட்சம் குழந்தைகளும், நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் 28.17 இலட்சம் குழந்தைகளும் பயனடைந்து வருகின்றனர். இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சத்துணவுத் திட்டத்திற்காக 1,644.52 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 'ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்'* (ICDS) *கீழ், 6 முதல் 36 மாதங்கள் வரை உள்ள 17.63 இலட்சம் குழந்தைகளுக்கும், 2 முதல் 5 வருடங்கள் வரை உள்ள 13.97 இலட்சம் குழந்தைகளுக்கும், 6.55 இலட்சம் கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், 4.02 இலட்சம் வளரிளம் பெண்களுக்கும் ஊட்டச்சத்து மிக்க உணவு வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக 1,699.79 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*140. முதியோருக்கும், சமூகத்தில் நலிவடைந்த பிரிவினருக்கும் சிறப்பான சமூகப் பாதுகாப்பு வலையை* (Social Security Net) *மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கியுள்ளது. சமூகப் பாதுகாப்பு உதவித் தொகை வழங்கும் திட்டங்களின்கீழ், அனைத்துப் பிரிவினருக்கும் மாதந்தோறும் 1,000 ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சமூகப் பாதுகாப்பு உதவித்தொகைத் திட்டங்களுக்காக 3,820 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*141. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சமூக நலத் துறைக்காக 4,512.32 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

**அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன்**

*142. 2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 30-6-2016 அன்று நிறைவடைந்தது. அரசு அலுவலர்கள் மற்றும் அவர்களின் தகுதி வாய்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு, 1-7-2016 முதல் மேலும் நான்கு ஆண்டுகளுக்கு மருத்துவ சிகிச்சைகளை வழங்குவதற்காக, (மேசையைத் தட்டும் ஒலி) 'புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்-2016-ஐ' செயல்படுத்த*

ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம், அலுவலர்களுக்கும், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் நான்காண்டுகளில் நான்கு இலட்சம் ரூபாய் வரை சிகிச்சை பெற வகை செய்கிறது. தற்போது நீட்டிக்கப்பட்ட இத்திட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாக, சில குறிப்பிட்ட சிகிச்சைகளுக்கு மட்டும் உச்சவரம்புத் தொகை 7.50 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்காக, இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

143. ஏழாவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஆராய்ந்து, அனைத்து அம்சங்களுக்கும் மத்திய அரசு முழுமையாக ஒப்புதல் அளித்த பின்னர், அவற்றை ஆய்வு செய்து, தமிழக அரசு அலுவலர்களுக்கு புதிய ஊதிய விகிதத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து, தகுந்த பரிந்துரைகளை அளிப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, உயர் அலுவலர்கள் குழுவினை அமைக்கும்.

144. நாட்டிலேயே முதன்முறையாக, ஏழு இலட்சம் ஓய்வூதியர்கள் பயன்பெறும் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தியது குறித்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பெருமிதம் கொள்கிறது. 2016-2017 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக 129 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஓய்வூதியம் மற்றும் ஓய்வுகாலப் பலன்களுக்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 18,868 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## இலங்கைத் தமிழ் அகதிகள் நலன்

145. அகதிகள் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு திருமண உதவித் திட்டங்கள், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் போன்ற பல்வேறு நலத் திட்டப் பயன்களை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கி வருகிறது. அவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையும் கணிசமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் கண்ணியத்தோடும், பாதுகாப்போடும் வாழ்வதற்கு வகை செய்யும் இம்முயற்சிகள் தொடரும். 2016-2017 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இலங்கைத் தமிழ் அகதிகள் நலனுக்காக 105.98 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-15*

**மாற்றுத் திறனாளிகள் நலன்**

*146. மாற்றுத் திறனாளிகளின் நலனுக்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. மாற்றுத் திறனாளிகள் சமூகப் பாதுகாப்பு உதவித் தொகையைப் பெறுவதற்கு, ஏற்கெனவே இருந்த 60 சதவீதம் இயலாமைத் தகுதி* (Eligibility percentage of disability) *மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் 40 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றுத் திறனாளிகளின் நலத்திற்காக, 435 சிறப்புப் பள்ளிகள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. செவித்திறன் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள்* (Early Intervention Centres), *தகுதி வாய்ந்த ஆசிரியர்களுடன் 29 மாவட்டங்களிலும், மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான மையங்கள் 31 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன், பார்வை குறைபாடு உடையவர்களுக்கான ஏழு ஆரம்பநிலைப் பயிற்சி மையங்களும் செயல்பட்டு வருகின்றன. 2016-2017 ஆம் ஆண்டில், இரு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட விலையில்லா 1,000 பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக 396.74 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

**சிறுபான்மையினர் நலன்**

*147. கிறிஸ்தவர்கள் ஜெருசலத்திற்கு புனிதப் பயணம் செல்வதற்காக நிதியுதவி வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு வக்ஃபு வாரியம் மற்றும் தமிழ்நாடு ஹஜ் குழு ஆகியவற்றிற்கான வருடாந்திர நிருவாக மானியம் போன்ற இஸ்லாமிய சமூகத்தின் நலனுக்காக மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் வழங்கப்பட்டு வரும் உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், தேர்தல் அறிக்கையில் உறுதியளித்தவாறு, உலமாக்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

**வரவு செலவுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள்**

*148. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்டத்தில் கணிக்கப்பட்டுள்ள செலவினங்களை மேற்கொள்வதற்குத் தேவையான நிதி ஆதாரங்களைப் பற்றி இனி விளக்க விழைகிறேன். கடந்த சில ஆண்டுகளில், உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மந்த நிலை, தேசியப் பொருளாதாரத்தையும், மாநிலப் பொருளாதாரத்தையும் வெகுவாகப் பாதித்துள்ளது. பொருளாதார மந்த நிலையின் காரணமாக வரி வருவாயின் வளர்ச்சி குறைந்துள்ளதால், மாநில நிதி ஆதாரங்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.*

*149. மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் மிக முக்கிய ஆதாரமாக வணிக வரி உள்ளது. கடந்த சில ஆண்டுகளில், பொருளாதார மந்தநிலை காரணமாகவும், பெட்ரோலியப் பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைக்கக்கூடிய விற்பனை வரி வருவாய் குறைந்ததாலும், வணிக வரிகளின் வளர்ச்சி மிகக் குறைவாக உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில், பெட்ரோலியப் பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைக்கக்கூடிய விற்பனை வரி வருவாயில் தேக்க நிலை காணப்படுவது மட்டுமல்லாமல், 2015-2016 ஆம் ஆண்டில் இதன் வளர்ச்சி வீழ்ச்சி கண்டுள்ளது. இக்காரணிகளைக் கருத்திற்கொண்டு, இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 72,326.45 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட வணிக வரிகள், 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 67,629.45 கோடி ரூபாயாகக் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.*

*பிற்பகல் 1-20*

*150. டாஸ்மாக்மூலம் நடத்தப்படும் 500 மதுபானக் கடைகளை மூட அரசு முடிவெடுத்து, அதைச் செயல்படுத்தியுள்ளதால், நடப்பு நிதியாண்டில் மாநில ஆயத்தீர்வைமூலம் கிடைக்கும் வருவாய் 6,636.08 கோடி ரூபாயாகக் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், முத்திரைத் தாள்கள் மற்றும் பதிவுக் கட்டணங்களின்கீழ் கிடைக்கும் வருவாய் 9,858.17 கோடி ரூபாய் எனவும், வாகனங்கள் மீதான வரி வருவாய் 4,793.91 கோடி ரூபாய் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த மாநில சொந்த வரி வருவாய் 90,691.87 கோடி ரூபாயாக இருக்கும் என திருத்த வரவு-செலவுத் திட்ட*

மதிப்பீடுகளில் மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய் 9,723.95 கோடி ரூபாய் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

151. 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தாக்கல் செய்யும்போது, 2016-2017 ஆம் ஆண்டிற்கான மத்திய வரவு-செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படாமல் இருந்தது. அதனால், மத்திய வரிகளில் மாநில அரசின் பங்காக 2015-2016 ஆம் ஆண்டில் கணிக்கப்பட்ட தொகையைவிட 12 சதவீதம் கூடுதலாக, 2016-2017 ஆம் ஆண்டில் கிடைக்கும் என்ற உத்தேச அடிப்படையில், மத்திய வரிகளில், மாநில அரசின் பங்குத் தொகை 23,688.11 கோடி ரூபாயாக இருக்கும் என இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மதிப்பிடப்பட்டது. எனினும், 2016-2017 ஆம் ஆண்டிற்கான மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தொகையின் அடிப்படையில் இந்த ஆண்டிற்கான மத்திய வரிகளில் மாநில அரசின் பங்குத் தொகை 23,018.12 கோடி ரூபாயாகக் குறைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது. பதினான்காவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலான மானியங்கள் மற்றும் மாநிலத் திட்டங்களுக்கான மத்திய அரசின் நிதியுதவி ஆகியவற்றை கணக்கிற்கொண்டு, நடப்பு நிதியாண்டில் மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் உதவி மானியங்கள் 24,741.15 கோடி ரூபாய் என கணிக்கப்பட்டுள்ளது.

## நிதிநிலைக் குறியீடுகள்

152. இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 1,52,004.23 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்ட மொத்த வருவாய் வரவுகள் 2016-2017 ஆம் ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,48,175.09 கோடி ரூபாயாக இருக்குமென தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், சிறு குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள விவசாயக் கடன் தள்ளுபடி மற்றும் அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் வரை கட்டணமில்லா மின்சாரம் போன்ற புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதாலும், ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வந்த பல்வேறு நலத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்த உள்ளதாலும் மாநிலத்தின் செலவுகள் அதிகரித்துள்ளன. இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,61,159.01 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்ட வருவாய் செலவினங்கள் 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,64,029.56

கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக, நடப்பு நிதியாண்டிற்கான வருவாய்ப் பற்றாக்குறை 15,854.47 கோடி ரூபாயாக திருத்தி மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால், சட்டமன்றப் பேரவையின் இக்கூட்டத்தொடரில் தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டம், 2003-க்கு உரிய திருத்தங்கள் கொண்டு வரப்படும்.

153. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நிதிப் பற்றாக்குறை 40,533.84 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.96 சதவீதமாகும். இது, தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டம், 2003-ல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைக்கு உட்பட்டே உள்ளது.

154. மாநில மொத்த உற்பத்தி மதிப்பை கணக்கிடுவதற்கு 2011-2012 ஆம் ஆண்டு புள்ளி விவரங்களை அடிப்படை ஆண்டாக மத்திய அரசு மாற்றியமைத்துள்ளதால், 2016-2017 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த நிகரக் கடன் பெறுவதற்கான வரம்பும் 41,085 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. ஆனால், திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பெறப்படும் நிகரக் கடன் அளவு 40,529 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் மாநிலத்தின் ஒட்டுமொத்தக் கடன் நிலுவை 2,52,431 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, நடப்பு நிதியாண்டின் இறுதியில் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் மொத்த நிலுவைக் கடனின் விகிதம் 18.43 சதவீதமாக மட்டுமே இருக்கும்.

பிற்பகல் 1-25

155. இந்தத் திருத்த நிதிநிலை அறிக்கையின் இணைப்பாக இடைப்பட்டகால நிதி நிலவரத் திட்டம்@ இணைக்கப்பட்டுள்ளது. இதனை திருத்த நிதிநிலை அறிக்கையின் ஒரு பகுதியாகக் கருதி அவையில் படிக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

156. "குடிமக்களின் மகிழ்ச்சியே அரசனது மகிழ்ச்சி; அவர்களது நலமே தனது நலம்; தனக்கு நன்மை பயக்கக் கூடியவற்றை மட்டும் நன்று என்று கருதாமல் மக்களுக்கு நன்மை விளைவிக்கக்கூடிய அனைத்தும், தனக்கு நன்மை தரக்கூடியவையாக கருதுவதே அரசனின் பண்பு" எனக் கூறியுள்ளது அர்த்தசாஸ்திரம். இத்தகைய

@ 67 முதல் 75 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

குணங்களை முழுமையாகப் பிரதிபலிக்கும் கருணையுள்ளம் கொண்ட *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணம், *(மேசையைத் தட்டும் ஒலி)* சொல், செயல் அனைத்தும் ஒரே இலக்கை நோக்கியே, அதாவது மக்களின் நலம் பேணி *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர்களின் வளத்தைப் பெருக்குவதில் மட்டுமே உள்ளது. அவர்களுடைய ஆற்றல்மிகு தலைமையின்கீழ், இந்த மாநிலம் பல்வேறு சாதனைகளைப் புரிந்துள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* எனவே, மேலும் பல வெற்றிகளைப் பெற்று புகழின் உச்சத்திற்கு மாநிலத்தை கொண்டு செல்லும் வல்லமை *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கே உள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அளவற்ற மதிநுட்பமும், அறிவுக்கூர்மையும் வாய்ந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள ஒவ்வொரு நுட்பமான விவரத்தையும் ஒருங்கிணைத்து தயாரிக்க வழிகாட்டியதுடன், தனது உறுதியான பேராதரவையும் அளித்ததால்தான் இந்த வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்து இங்கு சமர்ப்பிக்க முடிந்தது. *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இத்தகைய பெருந்தன்மைக்கும், ஆதரவிற்கும், வழிகாட்டுதலுக்கும் எனது மனமார்ந்த நன்றியை மீண்டும் ஒருமுறை நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

157. இந்தத் திருத்த நிதிநிலை அறிக்கையை வடிவமைத்துத் தயாரிப்பதில் என்னுடன் அயராது பணியாற்றிய நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலர் திரு க. சண்முகம், இ.ஆ.ப., அவர்களுக்கும், அவருடன் பணியாற்றிய நிதித் துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

158. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்திற்கு இந்த அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் 25-7-2016 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-28 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.*

******

(*65 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.*)

# இணைப்பு

# இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

*தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டம் 2003-ன் பிரிவு 3(1)-ன்படி, வரவு-செலவுத் திட்ட அறிக்கையுடன் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றையும் மாநில அரசு சட்டப் பேரவையில் வைக்க வேண்டும். மேலும், இச்சட்டத்தின், பிரிவு 3(2)-ன்படி, வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை போன்ற நிதி நிலைக் குறியீடுகளுக்கான இலக்குகளை வரும் ஆண்டுகளுக்குக் குறிப்பிட்டும், அதற்கான அனுமானங்களைத் தெளிவாக விளக்கியும் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி, நடப்பு நிதியாண்டு மற்றும் 2017-2018 முதலான அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகிறது.*

**நோக்கங்கள்**

*மாநிலத்தின் சமச்சீரான வளர்ச்சி எனும் ஒட்டுமொத்த நோக்கத்தை அடையும் வகையில், அனைத்து தரப்பு மக்களும், குறிப்பாக, ஏழைகள், நலிவடைந்த பிரிவினர் ஆகியோரும் மாநில வளர்ச்சியில் பயன் பெறுவதற்கான உரிய வாய்ப்புகளை ஏற்படுத்திட, வேளாண்மை, தொழில் துறை மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு ஆகியவற்றில் முதலீட்டுக்குத் தேவையான அடிப்படை நிதி ஆதாரத்தை உருவாக்கி, உயர் பொருளாதார வளர்ச்சியை அடையுமாறு இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.*

*சமூகப் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற பல்வேறு பணிகளுக்கான நலத் திட்டங்களுக்கு இந்த அரசு அதிக அளவில் செலவிட்டு வருவதுடன், சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டுதல், நீர்ப்பாசனம் மற்றும் மின் திட்டங்கள் போன்ற மூலதனச் செலவுகளுக்கும் உரிய முக்கியத்துவம் அளித்து வருகிறது. அதே வேளையில், அகவிலைப்படி உயர்வு, ஊதிய உயர்வு, புதிய பணியிடங்கள் தோற்றுவிப்பு மற்றும் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புதல் போன்றவற்றின் காரணமாக தொடர்ந்து*

உயர்ந்துவரும் நிருவாகச் செலவினங்களுக்கான நிதித் தேவைகளையும் மாநில அரசு நிறைவு செய்ய வேண்டியுள்ளது. எனினும், மத்திய நிதிக்குழு வகுத்துள்ள இலக்குகளுக்குட்பட்டு நிதிநிலை உறுதித்தன்மையை அடையவும் மாநில அரசு உறுதியாக உள்ளது.

2016-2019 ஆம் ஆண்டு காலக்கட்டத்திலும், அதனைத் தொடர்ந்தும், வருவாய்ப் பற்றாக்குறை அளவைக் கட்டுப்படுத்துதல், 2017-2018 ஆம் ஆண்டினைத் தவிர்த்து ஏனைய ஆண்டுகளில் நிதிப் பற்றாக்குறையை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் மூன்று சதவீதத்திற்குள் கட்டுப்படுத்துதல் மற்றும் மத்திய நிதிக்குழு நிர்ணயித்துள்ள வரம்பிற்குள் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிலுவைக் கடன் அளவு சதவீதத்தைப் பராமரித்தல் முதலான நிதிநிலை இலக்குகள் பராமரிக்கப்பட வேண்டும் என்பதை இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டமானது உறுதி செய்கிறது.

## எதிர்காலக் கணிப்புகள்

மாநிலங்களின் மொத்த உற்பத்தி மதிப்பு, 2011-2012 ஆம் ஆண்டின் புதிய புள்ளி விவரங்கள் அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. எனவே, வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பு இந்த புதிய புள்ளி விவரங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. தற்போதைய போக்குகளின் அடிப்படையில், நடப்பு நிதியாண்டில் மாநிலத்தின் வளர்ச்சி விகிதம் உயரளவில் இருக்குமெனவும், பண வீக்கம் மிதமான அளவில் இருக்குமெனவும் கணிக்கப்பட்டுள்ளது.

## I. வருவாய்க் கணக்கு வரவுகள்

மத்திய அரசின் நிதி உதவி உள்ளிட்ட மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் 2016-2017 ஆம் ஆண்டில் 1,48,175.09 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. வருவாய்க் கணக்கு வரவுகளின் முக்கியக் கூறுகள் மற்றும் அவற்றின் வளர்ச்சிப் போக்குகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

## 1. மாநில அரசின் சொந்த வரி வருவாய்

2011-2012 ஆம் ஆண்டின் நிலையான விலையில், 2012-2013 ஆம் ஆண்டில் 4.85 சதவீதமாக இருந்த மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் வளர்ச்சியானது, 2014-2015 ஆம் ஆண்டில் 6.94 சதவீதமாக உயர்ந்துள்ளது, மாநிலப் பொருளாதார வளர்ச்சி மீண்டு வருகிறது என்பதற்கான அறிகுறியாகும். 2011-2012 ஆம் ஆண்டின் நிலையான

விலையில், 2015-2016 ஆம் ஆண்டில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் வளர்ச்சி 8.79 சதவீதமாகும். இப்போக்கின் அடிப்படையில், நடப்பு நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி விகிதம் மேலும் அதிகரித்து, மாநிலம் உயர் வளர்ச்சி விகிதத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2015-2016 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளின்படி மாநில அரசின் சொந்த வரி வருவாய் 86,537.70 கோடி ரூபாயாகும். 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இது 90,691.87 கோடி ரூபாயாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில் முறையே 13.67 மற்றும் 13.58 சதவீதம் வளர்ச்சி பெறும் என கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது. மாநில அரசின் சொந்த வரி வருவாயின் முக்கிய அம்சங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:-

- 2016-2017 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வணிக வரியின்மூலம் பெறப்படும் வரவுகள் 67,629.45 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. பெட்ரோலியப் பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைக்கக்கூடிய விற்பனை வரி வருவாய் குறைந்துள்ளதால் இம்மதிப்பீடு திருத்தப்பட்டுள்ளது.

- நடப்பு நிதியாண்டில், டாஸ்மாக்மூலம் நடத்தப்படும் 500 மதுபானக் கடைகளை மூடுவது என அரசு எடுத்துள்ள முடிவின் தாக்கத்தாலும், தற்போதைய போக்குகளின் அடிப்படையிலும், 2016-2017 ஆம் ஆண்டில் மாநில ஆயத்தீர்வைகளின்மூலம் வரவுகள் 6,636.08 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

- 2015-2016 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில், 9,469.29 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்கள் மூலமாகக் கிடைக்கும் வரவுகள், 2016-2017 ஆம் ஆண்டில் 9,858.17 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- 2015-2016 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 4,385 கோடி ரூபாயாக மோட்டார் வாகன வரி வருவாய் இருக்கும் என்ற மதிப்பீடானது, 2016-2017 ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 9.33 சதவீத வளர்ச்சியுடன் 4,793.91 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## 2. வரி அல்லாத வருவாய்

2016-2017 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் 9,723.95 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. சுரங்கத் தொழிலுக்கு நமது மாநிலத்தில் குறைந்த வாய்ப்புகளே உள்ளதாலும், பெரும்பாலான அரசு சேவைகள் கட்டணம் இல்லாமலோ அல்லது குறைந்த கட்டணத்திலோ வழங்கப்படுவதாலும், 2015-2016 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டு அளவிலிருந்து சிறிதளவே உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சி விகிதம் 6 சதவீதமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

## 3. மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு

மாநிலங்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளக்கூடிய மத்திய வரிகளில் நிகர வரி வருவாயில் தமிழகத்தின் பங்கானது, ஒவ்வொரு நிதிக்குழுவினாலும் குறைக்கப்பட்டு வருகிறது. பதிமூன்றாவது நிதிக்குழுவின் பரிந்துரைப்படியான தமிழகத்தின் பங்கானது பதினான்காவது நிதி ஆணையத்தின் பரிந்துரையால், சேவை வரியைப் பொறுத்தவரையில் 5.047 சதவீதத்திலிருந்து 4.104 சதவீதமாகவும், ஏனைய வரிகளைப் பொறுத்தவரையில் 4.969 சதவீதத்திலிருந்து 4.023 சதவீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு வரிகள் மற்றும் தீர்வைகள் உயர்த்தப்படுவதால், மாநிலங்களுக்கு கூடுதல் நிதி ஆதாரங்கள் கிடைக்கும் வாய்ப்புள்ளது என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தின் அடிப்படையில், 2016-2017 ஆம் ஆண்டில் மத்திய வரிகளில் நமது மாநிலத்திற்கான பங்கு 23,018.12 கோடி ரூபாயாக இருக்குமென இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மதிப்பிடப்பட்டுள்ளது. 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் 14 சதவீதமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

## 4. மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்

பதினான்காவது நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ள மாநிலப் பேரிடர் பொறுப்பு நிதி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான அடிப்படை மற்றும் செயல்பாடுகளுக்கான மானியங்கள் போன்ற உதவி மானியங்களையும், மத்திய அரசின் நிதி உதவியில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான நிதியுதவியையும்

கருத்திற்கொண்டு, 2016-2017 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் 24,741.15 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டு முதல், மத்திய அரசு பொறுப்பேற்கும் பெரும்பாலான திட்டப் பணிகளுக்கு மத்திய அரசு தனது பங்கினை 60 சதவீதமாகக் குறைத்துள்ளது. 2016-2017 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடானது மத்திய அரசிடமிருந்து வரப்பெறலாம் என மதிப்பிடப்பட்டுள்ள மத்திய விற்பனை வரிக்கான இழப்பீட்டுத் தொகையையும் உள்ளடக்கியதாகும். 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் 12 சதவீதமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

## II. வருவாய்க் கணக்கில் செலவுகள்

நடப்பு நிதியாண்டில் வருவாய்க் கணக்கு செலவுகள் 1,64,029.56 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2015-2016 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளைவிட 10.99 சதவீதம் கூடுதலாகும். வருவாய்க் கணக்கு செலவுகளின் முக்கிய கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

❖ 2016-2017 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சம்பள செலவினத்திற்கான ஒதுக்கீடு 45,542.18 கோடி ரூபாயாகும். ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வுக்கால பலன்கள் குறித்த செலவினத்திற்கான ஒதுக்கீடு 18,868.16 கோடி ரூபாயாகும். இது, மொத்த வருவாய்ச் செலவுகளில் 39.27 சதவீதமாகும். அகவிலைப்படி உயர்வு, ஊதிய உயர்வு மற்றும் காலிப் பணியிடங்களை நிரப்புதல் ஆகியவற்றால் ஏற்படக்கூடிய செலவுகளின் காரணமாக, 2017-2018 ஆம் ஆண்டிற்கான சம்பளச் செலவினம், மற்றும் ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வுக்காலப் பலன்கள் குறித்த செலவினங்கள் ஆகியவற்றின் வளர்ச்சி விகிதம் முறையே 30 மற்றும் 35 சதவீதமாக இருக்கும் எனவும், இதுவே 2018-2019 ஆம் ஆண்டில் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் ஆகிய இரண்டிற்கும் சேர்த்து 11 சதவீதமாக இருக்கும் எனவும் கருதப்படுகிறது. ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் 2017-2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் என்று கருதப்படுவதன் அடிப்படையில் அந்த ஆண்டிற்கான கணிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

❖ 2016-2017 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மானியம் மற்றும் உதவித்தொகைக்கான ஒதுக்கீடு

*68,211.05* கோடி ரூபாயாகும். உணவு மானியம், மின்சார மானியம், கல்வி உதவித் தொகைகள் முதலான பல்வேறு நலத்திட்டங்களினால், *2015-2016* ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளைவிட இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மதிப்பீடு உயர்ந்துள்ளது. கூட்டுறவு நிறுவனங்களுக்கு, குறு சிறு விவசாயிகள் செலுத்த வேண்டிய விவசாயக் கடன் தள்ளுபடி மற்றும் வீடுகளுக்கு *100* யூனிட் இலவச மின்சாரம் போன்ற புதிய திட்டங்களுக்கான கூடுதல் செலவினங்கள் வருவாய்க் கணக்கில் செலவினத்தை அதிகரித்துள்ளன. மேலும், மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் வளர்ச்சிக் கணிப்பிற்கேற்ப, உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகரிக்கப்பட்ட நிதிப் பகிர்வு கணிக்கப்பட்டுள்ளது. *2017-2018* மற்றும் *2018-2019* ஆம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சி விகிதம் முறையே *7* மற்றும் *8* சதவீதமாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

❖ *2016-2017* ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஊதியம் அல்லாத செயல்முறை மற்றும் பராமரிப்பு செலவுகள் *10,184.69* கோடி ரூபாயாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பராமரிப்பு, நிருவாகச் செலவுகள், எரிபொருள் செலவுகள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு சீருடை வழங்குதல் ஆகிய திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளை உள்ளடக்கியதாகும். *2017-2018* மற்றும் *2018-2019* ஆம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சி விகிதம் *2* சதவீதமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

❖ *2016-2017* ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வட்டி செலுத்துதல் *21,215.67* கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது மொத்த வருவாய்ச் செலவுகளில் *12.93* சதவீதமாகும். *2016-2017* ஆம் ஆண்டிற்கான வட்டிச் செலவு மொத்த வருவாய் வரவில் *14.32* சதவீதமாகும். இது, *2017-2018* மற்றும் *2018-2019* ஆம் ஆண்டுகளில், முறையே, *14.45* மற்றும் *14.59* சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## III. மூலதனக் கணக்கில் செலவுகள்

*2016-2017* ஆம் ஆண்டில் மூலதனப் பணிகளுக்கான செலவுகளை உயர்த்த மாநில அரசு கருதியுள்ளது. அதன் விளைவாக, மூலதனம் குறித்த செலவுகளுக்கு *2015-2016* ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடான *22,878.45* கோடி ரூபாய், *2016-2017* ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் *24,679.38*

கோடி ரூபாயாக கணிக்கப்பட்டுள்ளது. இது 2017-2018 ஆம் ஆண்டில் 9.25 சதவீதம் மற்றும் 2018-2019 ஆம் ஆண்டில் 11.13 சதவீதமாகவும் மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## IV. வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை

2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வருவாய்ப் பற்றாக்குறை 9,154.78 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டது. எனினும், தொடர்ந்து வரும் உலகப் பொருளாதார மந்த நிலையால் வரி வருவாய் வளர்ச்சி குறைவாக உள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வளர்ச்சி விகிதத்தில் குறிப்பிடத்தகுந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, பெட்ரோலியப் பொருட்கள் விற்பனை மீதான வரி வருவாயில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால், வணிக வரி வரவுகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்படுகிறது. இக்காரணிகளைக் கணக்கில் கொண்டு 2016-2017 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வருவாய்ப் பற்றாக்குறை 15,854.47 கோடி ரூபாயாக திருத்தப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை 40,533.84 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 2.96 சதவீதமாகும். மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதம் 2017-2018 ஆம் ஆண்டில் 3.34 சதவீதமாகவும், 2018-2019 ஆம் ஆண்டில் 2.96 சதவீதமாகவும் இருக்கும். 2017-2018 ஆம் ஆண்டில் ஏற்படக்கூடிய கூடுதல் செலவினங்களைச் சமாளித்து நிதிப் பற்றாக்குறையை வரையறுக்கப்பட்ட மூன்று சதவீதத்திற்குள்ளாகவே கட்டுப்படுத்துவதற்கு, மாநில அரசு கூடுதல் நிதி ஆதாரத்தைத் திரட்டுவது அல்லது செலவுகளைக் கட்டுப்படுத்துவது அவசியமாகும்.

## V. கடன்கள்

பதினான்காவது நிதி ஆணையம் பரிந்துரைத்த கணக்கீட்டின்படி மத்திய அரசு நிர்ணயித்த ஒட்டுமொத்தக் கடன் வரம்பின் அடிப்படையில், கடன் வரவுகள் மற்றும் திரும்பச் செலுத்துதல் மதிப்பிடப்பட்டுள்ளன. மத்திய அரசு, 2011-2012 ஆம் ஆண்டின் புள்ளி விவரங்களின் அடிப்படையில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பை திருத்தம் செய்துள்ளதால், 2016-2017 ஆம் ஆண்டிற்கான நிகரக் கடன் வரம்பு 37,782 கோடி ரூபாயிலிருந்து 41,085 கோடி ரூபாயாகத் திருத்தப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டில் நிகர கடன் வாங்குதல் 40,529 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வருங்கால வைப்பு நிதி உள்ளிட்ட நிலுவையிலுள்ள கடன் 31-3-2017 அன்று, 2,52,431 கோடி ரூபாயாக இருக்கும். இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 18.43 சதவீதம் மட்டுமே ஆகும்.

## VI. கடன் உத்தரவாதங்கள்

ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 100 சதவீத அளவு அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 10 சதவீத அளவு, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 31-3-2015 அன்று உள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்களின் அளவு முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 49.70 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 4.91 சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 75 சதவீதம் அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 7.50 சதவீதம் இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 31-3-2015 அன்று உள்ளபடி மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்களின் **(Risk weighted guarantees)** அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 9.28 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 0.92 சதவீதமாகவும் உள்ளது.

### முடிவுரை

மாநிலத்தின் பொருளாதாரம் மந்த நிலையிலிருந்து மீண்டு வளர்ச்சிப் பாதையில் செல்வதை, 2012-2013 ஆம் ஆண்டில் 4.85 சதவீதமாக இருந்த மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் வளர்ச்சி விகிதமானது (நிலையான விலைகளின் அடிப்படையில்), 2015-2016 ஆம் ஆண்டில் 8.79 சதவீதமாக அதிகரித்துள்ளது தெளிவாக்குகிறது. இருப்பினும், மாநிலத்தின் சொந்த வரி வருவாய், குறிப்பாக, வணிக வரி வருவாய் வரவுகளின் குறைந்த வளர்ச்சி விகிதம், வருவாய் வரவுகளில் கடுமையான வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், மத்திய அரசு மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கக்கூடிய நிகர வரி வருவாயில் தமிழகத்தின் பங்கு குறைந்ததும், மத்திய அரசால் காலம் தாழ்த்தி உதவி மானியங்கள் விடுவிக்கப்படுவதும், மத்திய

*அரசு பொறுப்பேற்கும் திட்டப் பணிகளுக்கு மத்திய அரசு தனது பங்கினைக் குறைத்துள்ளதும் மாநிலத்தின் நிதிநிலையை கூடுதலாக பாதித்துள்ளது. எனினும், செலவுகளின் பாங்கு நிலையாக உள்ளது. வருவாய் வரவுகளில் காணப்படும் இந்த சுணக்கமான சூழ்நிலையிலும், 2017-2018 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறையைத் தவிர்த்து, ஏனைய ஆண்டுகளில் ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறை, நிகரக் கடன், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் நிலுவையில் உள்ள மொத்தக் கடன் விகிதம் ஆகியவை அனுமதிக்கப்பட்ட அளவிற்குள்ளேயே கட்டுப்படுத்தப்படும். மாநிலப் பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல அரசு அனைத்து வகையான நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுத்து வருகிறது.*

*******

# அட்டவணை–இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

*(ரூபாய் கோடியில்)*

| ஜூலை -2016 | 2014-2015 கணிப்புகள் | 2014-2015 கணக்குகள் | 2015-2016 கணிப்புகள் | 2015-2016 திருத்த மதிப்பீடு | 2016-2017 கணிப்புகள் | 2016-2017 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2017-2018 கணிப்புகள் | 2018-2019 கணிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருவாய் | **1,37,733.82** | **1,22,420.44** | **1,43,603.43** | **1,38,306.20** | **1,62,480.38** | **1,48,175.09** | **1,67,344.59** | **1,88,958.35** |
| மாநிலத்தின் சொந்த வருவாய் | **108,545.23** | **87,007.14** | **112,159.32** | **95,468.95** | **119,108.84** | **100,415.83** | **113,393.85** | **128,008.70** |
| வரி | 101,557.18 | 78,656.54 | 103,892.52 | 86,537.70 | 109,815.20 | 90,691.87 | 103,086.46 | 117,082.87 |
| வரி அல்லாதவை | 6,988.05 | 8,350.60 | 8,266.80 | 8, 931.25 | 9,293.64 | 9,723.95 | 10,307.39 | 10,925.83 |
| மத்திய அரசிடமிருந்து பெறப்படுபவை | **29,188.59** | **35,413.30** | **31,444.11** | **42,837.25** | **43,371.54** | **47,759.27** | **53,950.74** | **60,949.64** |
| பங்கிடப்பட்ட வரிகள் | 19,878.51 | 16,824.03 | 22,114.89 | 21,149.89 | 24,583.87 | 23,018.12 | 26,240.66 | 29,914.35 |
| உதவி மானியம் | 9,310.08 | 18,589.27 | 9.329.22 | 21,687.36 | 18,787.67 | 24,741.15 | 27,710.09 | 31,035.30 |
| மூலதன வரவுகள் | | **16.29** | | | | | | |
| வட்டியல்லாத செலவு | **147,583.32** | **133,920.47** | **154,553.74** | **152,315.68** | **172,740.18** | **167,493.27** | **195,021.34** | **2,13,382.24** |
| சம்பளங்கள் (கல்விக்கான மானியங்கள் உட்பட) | 40,100.38 | 37,070.31 | 40,721.78 | 41,445.35 | 45,749.28 | 45,542.18 | 59,204.83 | 65,717.37 |
| ஓய்வூதியங்களும் ஓய்வுகாலப் பலன்களும் | 17,785.50 | 15,823.56 | 18,583.93 | 17,543.96 | 20,721.32 | 18,868.16 | 25,472.02 | 28,273.94 |
| ஊதியம் அல்லாத செயல்பாடுகளும் பராமரிப்புகளும் | 10,366.76 | 9,498.47 | 11,875.90 | 10,694.00 | 10,882.22 | 10,184.69 | 10,388.38 | 10,596.15 |
| உதவித் தொகைகளும் நிதி மாற்றங்களும் | 52,404.23 | 50,713.33 | 53,974.83 | 59,741.47 | 64,808.09 | 68,211.05 | 72,985.82 | 78,824.69 |
| ஏனைய வருவாய்ச் செலவினங்கள் | 45.54 | 43.63 | 35.10 | 12.45 | 8.57 | 7.81 | 7.81 | 7.81 |
| மூலதன ஒதுக்கீடு | 25,880.91 | 17,802.98 | 26,852.95 | 20,765.06 | 28,202.80 | 22,368.85 | 24,605.74 | 27,558.42 |
| நிகரக் கடன் வழங்கல் | 1,000.00 | 2,968.19 | 2,509.25 | 2,113.39 | 2,367.89 | 2,310.53 | 2,356.74 | 2,403.88 |
| நிதிக் குறியீடுகள் | | | | | | | | |
| முதன்மை உபரி(+) / பற்றாக்குறை (-) | **-9,849.50** | **-11,500.03** | **-10,950.31** | **-14,009.49** | **-10,259.79** | **-19,318.18** | **-27,676.75** | **-24,423.89** |
| வட்டி செலுத்துதல் | 13,584.93 | 15,678.71 | 17,628.46 | 18,350.10 | 19,999.45 | 21,215.67 | 24,185.86 | 27,571.88 |
| மொத்த வருவாய் வரவுகளில் செலுத்தப்பட்ட வட்டித் தொகை | 9.86 % | 12.81% | 12.28% | 13.27% | 12.31% | 14.32% | 14.45% | 14.59% |
| வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) | **3,446.48** | **-6,407.56** | **783.43** | **-9,481.14** | **311.45** | **-15,854.47** | **-24,900.14** | **-22,033.49** |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-)% | 2.50 % | -5.23% | 0.55% | -6.86% | 0.19% | -10.70% | -14.88% | -11.66% |
| நிதி உபரி (+) / பற்றாக்குறை (-) / யில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) % | -14.71 % | 23.59% | -2.74% | 29.30% | -1.03% | 39.11% | 48.01% | 42.38% |
| நிதி உபரி (+) / பற்றாக்குறை (-) (சரிக்கட்டப் பட்டவை) | **-23,434.44** | **-27,162.45** | **-28,578.77** | **-32,359.59** | **-30,259.24** | **-40,533.84** | **-51,862.61** | **-51,995.78** |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதி உபரி (+) / பற்றாக்குறை (-) (சரிக்கட்டபட்டவை) % | -2.58% | -2.49% | -2.70% | -2.67% | -2.43% | -2.96% | -3.34% | -2.96% |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP)* | **9,09,861.75** | **10,92,564.00** | **10,60,003.13** | **12,12,668.00** | **12,47,691.00** | **13,69,494.00** | **15,51,500.00** | **17,57,694.00** |

***மாநில மொத்த உற்பத்தி மதிப்பு கணக்கீட்டிற்கு 2011-2012 நடப்புவிலை பின்பற்றப்பட்டுள்ளது (2014-2015 முதல் 2016-2017 ஆண்டு வரையிலான கணிப்புகளைத் தவிர)***

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**